
சத்தியமே கடவுள்

மலர்-3 நவம்பர்-2011



# காந்திநிகேதன் குரல்

# Voice of Gandhiniketan









## உழைப்பின் வாரா உறுதிகள் உளவோ





**வாய்மையே வெல்லும்**

# உள்ளே...


**1. காந்தியடிகள் அரசியலில் சிறந்தவரா? எதில்?** G. **முத்துராமலிங்கம்** **பக்கம் - 1**

**2. Duty** P.Thilagavathi,HM **பக்கம் - 1**

**3. தெய்வமே என்னை டி.வி ஆக்கு** பா.விமலா, உதவி ஆசிரியை **பக்கம் - 1**

**4.** நம் வாழ்க்கை கணினி முன்னே எஸ்.மகேஸ்வரி, 12 ஆம் வகுப்பு இ பரிவு **பக்கம் - 2**

**5.** இரவு வானத்தின் அதிசயம் - விண்மீன் குழுக்கள் சே.முரளி கிருஷ்ணன் **பக்கம் - 2**

**6.** வார்த்தைகளை மாற்றுங்கள் வாழ்க்கை மாறும் - த.ராஜ்குமார் **பக்கம் – 4**

**7.** பல்லும் பயனும் - சு.இராகவன் **பக்கம் – 5**

**8.** கல்வி நுட்பவியலில் தகவல் தொழில் நுட்ப பயன்பாடு-எம்.முத்துக்குமார் **பக்கம் – 5**

**9.** தொண்டர் கோ.வே. வாழ்கவே- என்.இரமணிசேகர் **பக்கம் – 7**

**10.** கிணற்றுநீர் திருமதி ஆர்.அனிதா பாரதி சங்கரநாராயணன் **பக்கம் – 7**

**11.** என்றும் சுதந்திரம் எங்கும் சுதந்திரம் எம்.வினோதினி **XI-B** **பக்கம் – 9**

**12.** மரமும் மனிதனும் - ஆர்.ராஜா அதியமான் **பக்கம் – 13**

**13.** AN ELEPHANTS LOYALTY - P.Thangapandiyammal – VII B **பக்கம் – 14**

**14.** யார் இளைஞன் -பி.கனகலட்சுமி **பக்கம் – 17**

**15.** தமிழர்களின் வாழ்வியலில் நீர்ப்பயன்பாடு -இரா.ஜெனகராஜன், **பக்கம் – 19**

**16.** ஹிட்லரை பணிய வைத்ததால் நடந்த சரித்திர விபரீதம்-சீ.கௌசல்யா **பக்கம் – 21**

**17.** நுனிவரை சென்றிடு -இரா.வைகை **பக்கம் – 22**

**18.** குறுந்தகவல் தொகுப்பு - கு.தங்கமுடி **பக்கம் – 25**

# ஆசிரியர்குரல்

அன்புடையீர்,

வணக்கம். இன்று தனிநபர் விழிப்புணர்வு அதிகரித்துள்ளது. காரணம் செய்தித்தாள்கள் மற்றும் ஊடகங்கள். அன்னா ஹசாரேயின் உண்ணாவிரதப் போராட்டத்திற்கு எந்தவித அழைப்பும் இன்றி இந்தியாவெங்கிலும் ஆதரவுக் கூட்டங்கள் நடைபெற்றன. ஏனெனில் இந்தியர் ஒவ்வொருவரும் தங்களின் அன்றாட நிகழ்வுகளில் லஞ்சத்தால் பாதிக்கப்படுகின்றனர். இன்று லஞ்சம் தேசியமயம் ஆகிவிட்டது எனலாம். தேசிய புற்று நோயாக வளர்ந்து வரும் லஞ்சம் எங்குபோய் முடியும்? லஞ்சம் வாங்குவது 'குற்றம்' என்ற உணர்வே இன்றி, அது தான் செய்யும் பணிக்கு இரண்டாவது ஊதியம் என எண்ணும் நிலை வந்து விட்டது.

வாழ்க்கை வசதிகளை அதிகரிக்க வேண்டும், வசதி படைத்தோரைப் போல் வாழவேண்டும் என்ற தணியாத ஆசை வந்தால் குற்ற உணர்வு எப்படி ஏற்படும்? செய்யும் தவறுகளுக்கு கடுமையான தண்டனை இல்லை என்ற காரணத்தில்தானே லஞ்சம் வாங்குகின்றனர். லஞ்சம் பெற்று பிடிபட்டாலும் எப்படியும் தப்பித்து விடலாம் என்ற நிலை இருப்பதால் தானே தைரியமாக இந்தத் தவறைச் செய்யத் தூண்டுகிறது. தேவையற்ற சட்டங்கள், காலதாமதம் ஆகியவைதான் பொதுமக்களை லஞ்சம் கொடுத்தாலாவது காரியத்தை சாதித்துக் கொள்வோம் என்ற நிலைப்பாட்டை எடுக்க வைத்துள்ளது.

பள்ளி மாணவர்களிடையே தெரியாமல் இருந்த லஞ்சம் பற்றிய செய்திகள் ஊடகங்களால் அழுத்தமாக மனதில் பதிந்து விட்டன. பிஞ்சு மனங்களில் தஞ்சமடைந்துள்ள இந்த எண்ணங்கள் வருங்காலங்களில் லஞ்சம் பெறுவது தவறு என பொங்கியெழுமா? அல்லது அடங்கி விடுமா?

நற்பண்புகள், நேர்மை எண்ணங்கள் மாணவர்களின் இளம் பருவத்திலேயே நீதிக் கதைகள் மூலம் அறிவுறுத்தப்பட வேண்டும். இவை குடும்பஞ் சார்ந்த பண்புகள், குடும்பப் பெரியோர்கள், குழந்தைகள் மனதில் பதிய வைக்கும் உணர்வுகள்தான் காலம் முழுதும் நிலைக்கும். ஆசிரியர்களும், பெற்றோர்களும் உணர்ந்து செயல்பட வேண்டிய தருணம் இது.

## காந்தியடிகள் அரசியலில் உயர்ந்தவரா ? எதில்?

திரு.க.முத்துராமலிங்கம்
முதுகலை வேதியியல் ஆசிரியர்

காந்தியடிகள் அரசியலில் உயர்ந்தவரா? என்றால், இல்லை. அவரை விட உயர்ந்தவராக வெளி நாடுகளில் கல்வி பயின்று, வெளிநாடு + உள்நாட்டு அரசியல் தெரிந்த பண்டித நேரு உயர்ந்தவராக இருந்தார்.

காந்தியடிகள் நிர்வாகத் திறமையில் உயர்ந்தவரா? என்றால், இல்லை. அவரை விட உயர்ந்தவராக இந்தியாவின் இரும்பு மனிதராக வல்லபாய்படேல் இருந்தார்.

காந்தியடிகள் ஆன்மீகத்தில் உயர்ந்தவரா? என்றால், இல்லை. அவரை விட உயர்ந்தவராக பூதான தந்தை வினோபா இருந்தார்.

காந்தியடிகள் கல்வியறிவில் உயர்ந்தவரா? என்றால், இல்லை. அவரை விட உயர்ந்தவராக அபுல்கலாம் ஆசாத் இருந்தார்.

காந்தியடிகள் அகிம்சை கொள்கையில் உயர்ந்தவரா? என்றால் அதுவும் இல்லை. அவரை விட உயர்ந்தவராக பாரதநாட்டின் முதல் ராஷ்டிரபதியாக இருந்த பாபு இராஜேந்திர பிரசாத் விளங்கினார்.

ஆனால் இவர்கள் எல்லோரையும் விட மகாத்மா காந்தியடிகள் மிக உயர்ந்தவராக இருந்தார். எதில் என்றால் "உள்ளத்தால்". அவருடைய உள்ளம் உயர்ந்த உள்ளம். எதைச் செய்தாரோ அதைத் தான் சொன்னார். தான் சொல்லியதைச் செய்தார்.

இதனால் தான் காந்தியடிகள் எல்லோர் மனதிலும் நீங்காத இடத்தைப் பிடித்துள்ளார்.

எந்தத் துறையைச் சேர்ந்த வெற்றியாளரும்,
சாதனையாளரும் இந்த வார்த்தைகளில்
பொதிந்திருக்கும் மந்திரத்தை அறிந்திருப்பார்கள்
**"துன்பங்களுக்கு இடையில்தான்
வாய்ப்புகள் ஒளிந்திருக்கின்றன"**

## Duty

P.Thilagavathi,HM

Revolving round the sun
Reaching its goal no fun
Earth moves on milky way
Worth teaching our brisky way
The sun never takes any holiday
The air never applies for off day
The nature preaches all the day
Thousand way to live the gay
Duty-bound are beauty-bound
Pretty lead their life around

## தெய்வமே என்னை டி.வி. ஆக்கு

பா.விமலா, உதவி ஆசிரியை

அது ஓர் அரம்பப் பள்ளி.

நான்காம் வகுப்பு ஆசிரியை தன் மாணவர்களிடம் நீ என்னவாக வேண்டும் என்று கடவுளிடம் வரம் கேட்பாய்? என்ற தலைப்பில் ஒரு கட்டுரை எழுதச் சொன்னார். எழுதப்பட்ட கட்டுரைகளைத் தன் வீட்டுக்கு எடுத்துச் சென்றார். வீட்டில் ஒவ்வொன்றாகப் படித்த போது ஒரு கட்டுரை அவர் உள்ளத்தைத் தொட்டது கண்ணீரை வரவழைத்தது.

அவரது கணவர் என்னவென்று விசாரித்தார். ஆசிரியை 'இது என் மாணவர்களுள் ஒருவன் எழுதியது. படித்துப் பாருங்கள்' என்றார். அக்கட்டுரையின் தலைப்பு என்ன தெரியுமா?

தெய்வமே என்னை ஒரு டி.வியாக்கு!

அந்த பிஞ்சு உள்ளத்தில் இதை எழுதும் எண்ணம் உண்டானது எப்படி? நீங்களே படித்துப் பாருங்களேன்.

கடவுளே இன்று நான் உன்னிடம் ஒரு வரம் கேட்கிறேன். அதை நீ மறுக்கக் கூடாது. அது என்ன தெரியுமா? நீ என்னை ஒரு டி.வி.யாக்கிவிடு. ஏனென்றால் என் வீட்டில்

டி.வி இருக்கும் இடத்தில் நான் இருப்பேன். அப்போது எனக்கென்று ஒரு தனி இடம் இருக்கும். என் குடும்பத்தில் எல்லோரும் என்னைச் சுற்றியே இருப்பார்கள். நான் கூறுவதை அலட்சியப்படுத்த மாட்டார்கள். எல்லோரின் கவனமும் பார்வையும் என் மேல்தான் இருக்கும். நான் கூறுவதை குறுக்கே பேசாமல் முழுவதுமாக மதித்துக் கேட்பார்கள்.

டி.வி.ரிப்பேரானால் அதை அப்பா உடனடியாக கவனிக்கிறார். அது போல் எனக்கு ஒரு பிரச்சனை என்றால் என்னையும் அவர் சீக்கிரம் கவனிப்பார், இல்லையா?

இறைவா, நான் டி.வி. யானால்...?

அப்பா அலுவலகத்தில் இருந்து களைத்து வந்ததும் அதன் முன் உட்காருவது போல் என்னுடனும் வந்து அமர்வார் அல்லவா? அம்மா வருத்தமாக இருக்கும் போதும் மூட் அவுட்டாகும் போதும் என்னை உதாசீனப்படுத்த மாட்டார், இல்லையா?

யார் என்னுடன் இருப்பது என்பதற்காகவே எனது அண்ணன் தம்பிகள் எல்லோரும், ஒருவருக்கொருவர் சண்டையிட்டுக்கொள்வார்கள்.

என் குடும்பத்தில் எல்லோருமே வேறு எதுவுமே முக்கியமில்லை என்னோடு இருப்பது மட்டுமே முக்கியம் என எப்போதும் நினைப்பார்கள். எல்லாவற்றையும் ஒதுக்கி வைத்து விட்டு சிறிது நேரமாவது என்னுடன் இருப்பார்கள். முக்கியமாக நான் அவர்களை எல்லாம் எப்போதும் சந்தோசமாகச் சிரிக்க வைப்பேன். இறைவா நான் உன்னிடம் அதிகமாக ஒன்றும் கேட்கவில்லை. என்னை டி.வியாக மாற்றிவிடு. அது போதும். அப்படித்தான் நான் வாழ விரும்புகிறேன்.

-இப்படி முடிந்திருந்தது அக்கட்டுரை

அந்தச் சிறுவனின் கடடுரையைப் படித்து முடித்தவுடன் ஆசிரியையின் கணவன், 'பாவம் அவன்', அவனுக்கு எப்படிப்பட்ட பெற்றோர்கள். பிள்ளைகளை எப்படி வளர்க்க வேண்டும் என்று தெரிய 'வேண்டாமா'...? என்றார் அலட்சியமாக.

மனைவியோ கண்ணீரைத் துடைத்தபடி நம் மகன்தான் இதை எழுதினான் என்றாள். கணவன் திகைத்து நின்றான். பெற்றோர்களுக்குத் தன் நிலையை உணர்த்திய பொறுப்பு மிக்க சிறுவனின் ஆதங்கம் இது.

**எதிர்காலத்தில் என்ன நேருமோ என்று கணக்குப் பார்த்துக் கொண்டே இருப்பவனால் எதையும் சாதிக்க முடியாது முயன்று செயல்களை செய்பவனே வாழ்க்கையில் வெற்றி பெறுவான்- சுவாமிஜி**

## செய்தித் துளிகள்



10 ஆம் வகுப்பு மற்றும் 12 ஆம் வகுப்பு பொதுத் தேர்வுகளில் பள்ளிஅளவில் அதிக மதிப்பெண் பெற்ற மாணவ, மாணவிகளுக்கு தலைவர் பேராசிரியர் ஆர் வேங்கடசாமி அவர்கள் மேற்படிப்பிற்கான ஆலோசனைகளையும், அறிவுரைகளையும் வழங்கி பாராட்டி பேசியபோது எடுத்த படம்.



மாணவர்கள் விளயாட்டினை மேம்படுத்தும் விதமாக புதிதாக கூடைப்பந்தாட்ட மைதானம் ரூபாய் 8 லட்சம் செலவில் அமைக்கப்பட்டது. எமது பள்ளி கூடைப்பந்தாட்ட அணி மாணவர்களுடன் காவலர் கூடை பந்தாட்ட அணி பயிற்சியாளர் திரு ரஃபீக், ஆசிரமத் தலைவர், தலைமையாசிரியை மற்றும் ஆசிரியர்கள்.

## நம் வாழ்க்கை கணினி முன்னே

எஸ்.மகேஸ்வரி, 12 ஆம் வகுப்பு இ பரிவு

ஒரு பயன்பாடு என்பது வேலைக்காக
நிகழ்ச்சி என்பது தொலைக்காட்சிக்காக
சிறு கர்சர் கூட குறிப்புக்காக
ஒவ்வொரு விசைப் பலகையும் ஒரு பியானோவே...
நினைவு என்பது காலத்தை வென்று நிற்க
ஒவ்வொரு குறுந்தகடும் ஒரு வங்கி கணக்கே
மேரும் நீங்கள் ஒரு CD யில் மறைத்தால்-லென்ஸ்
வைத்தும் யாரும் கண்டு பிடிக்க முடியாதே...
பெரிய தகவலைக் கூட சிறிய
பைலுக்குள் அடக்கி விடலாம்-கவனம்
அதை ரகசியமாக பூட்ட வில்லையெனில்
உங்களை பூட்டி விடுவர் சிறையிலே....
ஹார்ட் டிரைவ் என்பது ஒரு பெரிய பாதை
Log என்பது நெருப்பு பந்தம்
மவுஸ் என்பது மவுசுக்காக அல்ல
நம் குறிப்பை கணினியிடம் சொல்வதற்கே....
வெட்டிக் கொள்ளலாம் கத்தியில்லாமல் தகவலை
ஒட்டியும் கொள்ளலாம் பசையில்லாமல் தகவலை
சிலந்தி கட்டிய வலையல்ல இன்டர் நெட்
வைரஸ் மட்டும் இதற்கு நண்பன் அல்ல...
நான் நினைக்கிறேன் என் நினைவுகளைத்
தேக்கி வைத்துக் கொள்ள
அதை அழிக்கும் உரிமை
எனக்குமே ஆம் என் கணினிக்குமே...

## இரவு வானத்தின் அதிசயம் - விண்மீன் குழுக்கள்

சே.முரளி கிருஷ்ணன்
பட்டதாரி ஆசிரியர்

இரவு வானமே அதிசயம் தான். அதிலும் கோள்கள் போலில்லாமல் சொந்தமாக ஆற்றலை உற்பத்தி செய்து ஒளிரக் கூடிய விண்மீன்கள் இன்னும் அதிசயம் தான். அதிலும் அதைவிட அதிசயம் ஒன்றுண்டு. அதனைதான் அறியப் போகிறோம்.

சராசரி இரவில் நன்கு ஒளிரக் கூடிய 1000-1500 நட்சத்திரம் என்னும் விண்மீன்களைக் காணலாம். உண்மையில் அவை வெகு தொலைவில் சூரியனை விட மிகப் பெரிதாகவும் உள்ளன. அவற்றில் பிரகாசமான விண்மீன்கள் இங்கிருந்து காணும் போது அருகருகே தெரிகின்றன. இது குறிப்பிட்ட வடிவமைப்பில் நமக்குத் தெரிகிறது. அத்தகைய வடிவமைப்பைக் கொண்டு, அவற்றை நினைவில் கொள்வதற்காக ஒவ்வொரு விண்மீன் குழுவிற்கும் பெயரிடப்பட்டது.

இதன் ஆதி எது? சுமார் 6000 ஆண்டுகளுக்கு முன்பிருந்தே நாட்காட்டி போன்றவை இல்லாத காலத்திலே விவசாயிகள் தாங்கள் எப்போது விதைக்க வேண்டும், எப்போது அறுவடை செய்ய வேண்டும் என்பதை தெரிவதற்காக விண்மீன் குழுக்களை அடையாளம் கண்டதாகக் கூறப்படுகிறது.


ஏனெனில் சில விண்மீன் குழுக்கள் வடக்கு வானத்தில் கோடை காலத்தில் மட்டும் தோன்றும் ( உ-ம்- Scorpius) இது போல் ஒவ்வொரு காலநிலைக்கும் ஒவ்வொரு விண்மீன் குழுக்களை அடையாளம் கண்டு பெயரிட்டனர்.

பாபிலோனியர்களும், கிரேக்கர்களும் வடக்கு வானத்திலுள்ள விண்மீன் குழுக்களை அடையாளம் கண்டு வைத்திருந்தனர். அதுபோல் தென் துருவ வானத்திலுள்ள விண்மீன் குழுக்களை ஐரோப்பியர்கள் அடையாளம் கண்டிருந்தனர்.

1922 ல் IAU (International Astronomical Union) அகில உலக வானியல் கூட்டமைப்பு எல்லா விண்மீன்களையும் ஆராய்ந்து 88 விண்மீன் குழுக்களை பட்டியலிட்டு வடிவத்திற்கேற்றாற்போல் பெயரும் இட்டது. அதன் பின்னர் “ஈஜின் டெல்போர்ட்” என்பவர் ஒவ்வொரு விண்மீன் குழுவுக்கும் எல்லை வரையறை செய்தார்.

எல்லா விண்மீன் குழுக்களும் ஒரு குறிப்பிட்ட வடிவத்தை கொண்டுள்ளது. உதாரணமாக இந்த இரு படங்களையும் பார்க்கலாம், முதல் படத்திலுள்ள

விண்மீன்கள் ஒரு வேடனைப் போலவும் கையில் சிங்கத்தலையும்? கண்ணில் காளையையும், பின்னால் நாயையும் நாம் பார்க்கலாம். இதனை இரண்டாம் படத்தைப் பார்த்து உறுதி செய்யலாம்.






மேற்கண்ட படத்தில் Orion, Taurus, Canis Major, Lapus போன்ற விண்மீன் குழுக்கள் உள்ளன.

விண்மீன் குழுக்களில் அதிக பிரகாசமான விண்மீன் குழு "Crux" ஆகும். அதிக எண்.ணிக்கையிலான விண்மீன்களைக் கொண்ட குழு "Centaurus" (101 விண்மீன்களைக் கொண்டது) அதிக பரப்பைக் கொண்ட விண்மீன் குழு நீர் பரப்பின் வடிவம் கொண்ட "Hydra" (3.158% வானத்தின் பரப்பை கோண்டது)

விண்மீன்குழுக்களுக்கு இடையே உள்ள சில ஒற்றுமைகளைக் கொண்டு 88 குழுக்கள் 8 குடும்பங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளன அவை

| | | |
|---|---|---|
| Zodiac | -12 | விண்மீன் குழுக்கள் |
| UrsaMajor | -10 | விண்மீன் குழுக்கள் |
| Perseus | -9 | விண்மீன் குழுக்கள் |
| Herculus | -19 | விண்மீன் குழுக்கள் |
| Orion | -5 | விண்மீன் குழுக்கள் |
| Hearenly Waters | -9 | விண்மீன் குழுக்கள் |
| Bayer | -11 | விண்மீன் குழுக்கள் |
| La Caille | -13 | விண்மீன் குழுக்கள் |

அரிய செயல்கள் அனைத்தும்
விடாமுயற்சியாலேயே அடையப் பெற்றிருக்கின்றன;
வெறும் வலிமையால் மட்டும் அல்ல

## "வார்த்தைகளை மாற்றுங்கள் வாழ்க்கை மாறும்"

(சென்னை ஸ்ரீராமகிருஷ்ணமடம் அந்தர் யோகத்தில் - சுவாமிகளின் கூற்று )


T.ரஜ்குமார்
பட்டதாரி ஆசிரியர்


"எண்ணத்தில் கவனமாய் இருங்கள்
ஏனெனில் எண்ணங்கள்தாம் சொற்களாகின்றன...
சொல்லில் கவனமாய் இருங்கள்
ஏனெனில் சொற்கள்தாம் செயல்களாகின்றன....
செயலில் கவனமாய் இருங்கள்
ஏனெனில் செயல்கள்தாம் பழக்கங்களாகின்றன....
பழக்கத்தில் கவனமாய் இருங்கள்
எனெனில் பழக்கங்கள்தாம் ஒழுக்கங்களாகின்றன...
ஒழுக்கத்தில் கவனமாய் இருங்கள்
ஏனெனில் ஒழுக்கங்கள்தாம் உங்கள் வாழ்வை வடிவமைக்கின்றன"

## அமுத வாக்குகள்

உன்னை இகழும் போது
நீ காட்டும் அடக்கம் பெரிதன்று
உன்னைப் புகழும் போது
நீ காட்டும் அடக்கம் பெரிய வெற்றியாகும்.

## செய்தித் துளிகள்



30.07 2011 ஆசிரம நிறுவனர் அமரர் கோ.வேங்கடாசலபதி அவர்களின் பிறந்தநாள் மற்றும் ஆசிரம ஆண்டு விழாவின் ஒரு பகுதியான கலை விழா வில் எம் பள்ளி மாணவிகள் வழங்கிய வில்லுப்பாட்டு நிகழ்ச்சியின் போது எடுத்த படம்.

## பல்லும் பயனும்

சு.இராகவன
பட்டதாரி ஆசிரியா

"பல் போனால் சொல் போச்சு" என்பது பழமொழி பல் என்பது பேசுவதற்கு மட்டும் பயன்படுவது இல்லை உணவை நன்கு அரைத்து உண்பதற்கும் பயன்படுகிறது.

சிறு வயதில் முளைக்கும் பற்கள் பால் பற்கள். இவை இருபது இருக்கும். முதல் 10 வயதுக்குள் உதிர்ந்து விடும். இதற்கு பின் முளைப்பது நிலைத்த பற்கள். இவை விழுந்தால் முளைக்காது. 2123/2123x2 என்ற சூத்திரப்படி குறிக்கப்படும் பல் வளர்ந்த மனிதனுக்கு முப்பத்திரண்டு எண்ணம் இருக்கும். பல்லை பாதுகாத்தலும், துலக்குதலும் மட்டும் போதாது. பல்லைத் தாங்கி நிற்கும் ஈறுகளையும் பாதுகாக்க வேண்டும். பல் துலக்கும் போது மெல்லிய வளைந்து கொடுக்கக் கூடிய Brush கொண்டு மேலும் கீழுமாக Paste கொண்டு துலக்க வேண்டும் கைகளால் ஈறுகளையும் தேய்த்து விட வேண்டும். ஒவ்வொரு உணவுக்கு முன்னும், பின்னும் பல் துலக்குவது நலம் என்றாலும் காலை வெறும் வயிற்று நேரத்திலும், இரவு தூங்குவதற்கு முன்னுமாவது தினம் துலக்குதல் வேண்டும்.

"நொறுங்கத் தின்றால் நூறு வயது வாழலாம்" என்பது ஒரு பழமொழி வாழ்வுக்கு பல் அவசியமானது என்பதை இதன் மூலம் அறியலாம். உணவை வாயில் அரைத்து விழுங்குதலில் உணவு மண்டலம் ஆரம்பமாகின்றது. ஆரம்பம் நன்றாய் இருந்தால் அனைத்தும் நன்றாய் இருக்கும். அதனாலேயே பெரியவர்கள் உணவைக்குடி? நீரை உண் என்று கூறியிருக்கிறார்கள் உணவை நன்கு மென்று திட உணவை திரவ உணவாக உமிழ்நீர் உதவியால் உண்டால் உணவின் அளவு குறையும். உண்ணும் நேரம் மட்டும் கூடும். இதனால் அரவை உறுப்புகள் சேதம் இல்லாது வயிற்றின் செரிமானத்திற்கு நன்கு உதவும் மேலும் பல்வேறு நோய்களை நெருங்கவிடாமல் தடுக்கலாம். வாழும் நாட்களை வசந்த நாட்களாய் கழிக்கலாம்.

## கல்வி நுட்பவியலில் தகவல் தொழில் நுட்ப பயன்பாடு

எம்.முத்துக்குமார், கணினி ஆசிரியா

பல துறைகளையும் உள்ளடக்கிய புதிய புலமாக கல்வி நுட்பவியல் என்ற புதிய துறை தற்போது உருவாகியுள்ளது. கல்வி நுட்பவியல் என்பது கற்பித்தல் திட்டங்கள், கற்பித்தல் முறைகள், நுட்பங்கள், காட்சி-கேள்வி ஊடகங்கள் இவற்றை வகுப்பறை கற்பித்தலில் சீரிய முறையில் பயன்படுத்துதல், அதனை முறையாக மதிப்பீடு செய்தல் என்ற செயல்முறையாகும்.

பொதுவாக நுட்பம் என்பது ஒரு செயலை முறையாக செய்து முடிக்கத் தேவையான யுக்திகளையும் அதனை செயலாக்கும் பொறிகளையும் இணைத்துக் கருதப்படுகிறது.

இந்தியா போன்ற வளரும் நாடுகளில் ஏற்பட்டுள்ள மக்கள் தொகை பெருக்கம் மற்றும் அறிவு பெருக்கம் இவற்றை எதிர் கொள்ள வேண்டிய நவீன முறைகளை கண்டறிந்து வேண்டிய அவசியத்தை ஏற்படுத்தியுள்ளது. எனவே நவீன நுட்பங்கள் கல்வியில் புகுத்தப்பட வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

அறிவியலில் ஏற்பட்ட வளர்ச்சி காரணமாக பல கருவிகள், புதுமைகள் படைக்கப்பட்டன. அறிவியலில் பல்வேறு புதிய பிரிவுகள் தோன்றி வளர்ந்துள்ளன. அறிவியல் மற்றும் நுட்பவியல் வளர்ச்சியின் விளைவாக கணினி நுட்பங்கள், தொலைத் தொடர்பு நுட்பங்கள், மின்னனுவியல் நுட்பங்கள் இவை அனைத்தும் இணைந்து செய்தி தகவல் தொழில்நுட்பவியல் என்ற புதிய துறை உருவாவதற்கு காரணமாக உள்ளது.

யுனெஸ்கோவின் கருத்துப்படி, அறிவியல், நுட்பவியல், மேலாண்மை நுட்பங்களினால் தகவல்களை கையாண்டு மனிதனின் சமூக, பொருளாதார, கலாச்சார முன்னேற்றத்திற்காக இத்தகவல்களை கணிப்பொறியுடன் செயல்படுத்தி பயன்படுத்துவதே செய்தி தகவல் நுட்பவியல் ஆகும்.

சுருக்கமாக சொல்ல வேண்டுமானால் கணிப்பொறி மற்றும் ஏனைய நுட்பங்களைப் பயன்படுத்தி தகவல்களைத்

திரட்டி, ஒருங்கிணைத்து சேமித்து அதனை அனைவரிடமும் பரவலாக்குவது என்பதே செய்தி தகவல் தொழில்நுட்பவியல் ஆகும்.

சுதந்திரம் பெற்ற பிறகு இந்திய கல்வி முயற்சிகள் வெகு வேகமாக வளர்சியடைந்துள்ளன. இந்திய கல்வியை சீராக்க அமைக்கப்பட்ட கல்விக் குழுக்கள், அமைப்புகளின் பல்வேறு அறிக்கைகள் இந்தியாவை வளர்ச்சிப் பாதையில் வழி நடத்துகின்றன. 1986ல் வெளியிடப்பட்ட புதிய கல்விக் கொள்கையில்தான் முதன் முதலாக கல்வியில் தகவல் தொடர்பு நுட்பவியலின் தேவை உணரப்பட்டது. ஆனால் இதற்கான நடைமுறைத் திட்டங்கள் ஏதும் இப்புதிய கல்விக் கொள்கையில் பரிந்துரைக்கப்படவில்லை. ஆயினும் இது தொடர்பான கட்டமைப்புகளை முதலில் பல்கலைக் கழகங்களில் உருவாக்கிட முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன.

யுனெஸ்கோ, அமைரிக்காவின் நாசா நிறுவனம் மற்றும் இந்திய விண்வெளித்துறை இவை மூன்றும் கூட்டாக இணைந்து தொலைக்காட்சியை எவ்வாறு கல்வியில் பயன்படுத்துவது என்ற மாபெரும் பரிசோதனையைச் செய்தன. உலகிலேயே கல்வி தொலைக்காட்சி ஒளிபரப்பில் செயற்கைக்கோள் பயன்படுத்தி முதன்முதலாக செய்யப்பட்ட ஒரு பன்னாட்டு கூட்டு பரிசோனைத் திட்டமாக இது கருதப்படுகிறது. இந்த SITE திட்டம் 1975 ஆகஸ்டு முதல் நாள் தொடங்கி வைக்கப்பட்டது. ADS6 என்ற செயற்கைக்கோள் அமெரிக்க நாட்டு நிறுவனமான நாசாவினால் வழங்கப்பட்டது. பின்னர் பல செயற்கைக்கோள்கள் ஏவப்பட்டு தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் ஒளிபரப்பு வளர்ச்சி பெற்றது.

இந்திய நாட்டின் வளர்ச்சி மற்றும் சமூக மேம்பாட்டில் செயற்கைக் கோள்களின் பங்கு மிக முக்கியமானது. இந்திய விண்வெளித் திட்டத்தின் முக்கிய நோக்கமாக இந்தியாவின் சமூக, பொருளாதார, கல்வி வளர்ச்சி விளங்குகிறது.

1990க்குப் பிறகு, இந்தியாவின் இரண்டாம் தலைமுறை செயற்கைக் கோள்களின் உதவியினால் நாட்டின் தொலைத் தொடர்பு மிகுந்த வளர்ச்சி பெற்றது. இதன் காரணமாக நாட்டின் முக்கிய அறிவியல் மையங்கள் மற்றும் சில பல்கலைக்கழகங்கள் தொலைத் தொடர்பு பிணையத்தின் மூலம் இணைக்கப்பட்டன. இக்கால கட்டத்தில் பள்ளிகளிலும், கல்லூரிகளிலும் கணிப்பொறி கல்வி அறிமுகப்படுத்தப்பட்டது. NIIT, CSC, APTECH போன்ற தனியார் நிறுவனங்களும் கணிப்பொறி கல்வியை பரப்ப இந்தியாவின் பல்வேறு நகரங்களில் இயங்கத் தொடங்கின. தகவல் தொடர்பு நுட்பவியலின் தேவை இந்தியாவில் போக்குவரத்து, சுகாதாரம், விவசாயம், மனித வளம் மற்றும் கல்வித் துறைகளில் உணரப்பட்டது. பல்கலைக்கழக ஆய்வுகள், கல்வி ஒளிபரப்பு மற்றும் தொலை தூரக் கல்வியில் இதன் தேவை அதிகரித்தது. இதன் காரணமாக பல பல்கலைக்கழகங்களிலும் கல்லூரிகளிலும் 1996 க்குப் பறிகு செயற்கைக் கோளுடன் தொடர்புடைய தொலைத்தொடர்பு வசதிகள் மற்றும் இணைய வசதிகள் அதிகரிக்கப்பட்டன. மேற்கண்ட சூழல் இந்தியாவில் உருவாக்கப்பட்டதன் காரணமாக இந்தியாவில் இத் தகவல் திட்டங்கள் அனைவருக்கும் கல்வி திட்டங்களுக்கும் முக்கியமான துவக்கக் கல்வியைப் பரவலாக்கும் முனைப்புடன் செயல்படுத்தப்படுகிறது.

இத் துறையானது இணையத்தின் பயன்பாடுகளை நடைமுறைப்படுத்த உதவுகிறது, தொலைதூர செய்தித் தொடர்பிற்கு உதவுகிறது, செயற்கைக் கோள் உதவி கொண்டு வானொலி, கல்வி தொலைக்காட்சி நிகழ்ச்சிகளை அளிக்க உதவுகிறது, இணைய வழிக்காட்சி-கலந்துரையாடல் செய்ய உதவுகிறது, இணைய வழிக் கற்றலுக்கு உதவுகிறது, இணைய பல்கலைக் கழகங்கள் திறம்பட செயல்பட உதவுகிறது. மேலும் இணைய வழி வாணிபம், மருத்துவம், விவசாயச் சேவைகள், வானிலை அறிக்கை மற்றும் பல்வேறு சேவைகள் நடைபெற உதவுகின்றது. தகவல் தொழில்நுட்பம் பல்வேறு துறைகளில் பயன்படுத்தப்பட்டாலும் இன்றைய சூழலிலும் இனி வருங்காலத்திலும் கல்வியில் இதன் பங்கு இன்றியமையாததாகவே இருக்கும்.

## தொண்டர் கோ.வே. வாழ்கவே

என்.இரமணிசேகர்
பட்டதாரி ஆசிரியர்

வாழ்க வாழ்க! வாழ்கவே!!
உலக உத்தமர் காந்தியடிகளின்
வல்லமை மிக்க உன்னதசீடர்
கோ.வே ஐயா புகழ் வாழ்கவே!
வேங்கடத்தான் நாமம் கொண்ட
தொண்டர் நாமம் வளர்கவே!
(வாழ்க)
கிராமத்தொண்டே இவரது மூச்சு
மராமத்துப் பணியே தினம் தினம் பேச்சு
சீராய் நிர்மாணத் திட்டந்தன்னை
சிறப்பாய் நடத்திக் காட்டியவர்
(வாழ்க)
மதியினை மயக்கும் மதுவை ஒழித்து
விதியை மாற்ற வேண்டுமென்றார்
கதியே இவரது காந்திய வழியே
சீராய் வழிகாட்டும் இவரது விழியே
(வாழ்க)
மானுடனாய் பிறப்பது எளிது – சிறந்த
மானுடனாய் பிறப்பது அரிது அரிது
சொல்வதை வாழ்வில் எடுத்துக் காட்டுவது என்பது
அண்ணல் வழியே எனது என்றது என்றும் பெரிது
(வாழ்க)
சோதனை ஆயிரம் வந்திட்ட போதும்
சாதித்தார் எங்கள் கோ.வே. –அகிம்சையினால்
பாரினை உயர்த்திட வாழ்ந்த இவர்
பார் உள்ள மட்டும் இவர் பேரும் நிற்கும்
வாழ்க வாழ்க வாழ்கவே!
என்றும் இவர் நாமம் வாழ்கவே!!

SMS Quotes

தற்பெருமை எங்கு முடிகிறதோ
அங்கு கண்ணியம் ஆரம்பிக்கிறது

## கிணற்றுநீர்

திருமதி ஆர்.அனிதா பாரதி சங்கரநாராயணன்
முன்னாள் மாணவி, கலிபோர்னியா

ஒரு ரயிலில் நான்கு பயணிகள் ஒரே இடத்தில் அமர்ந்து பயணம் செய்தனர். அவர்கள் சாப்பாடு வேலைமுடிந்ததும் ஒவ்வொருவரும் மாத்திரைகள் எடுத்து உட்கொண்டனர். அதன்பின் தங்கள் வியாதிகளை பற்றி பேசஆரம்பித்தனர்

ஒருவர் சொன்னார் " எனக்கு சர்க்கரை" வியாதிங்க பத்திய சாப்பாடுதான். கட்டுப்பாடு இல்லைனா பின்னால வேதனைப்படனும் என்ன செய்வது என்றார்.

இரண்டாமவர் கூறினார் "எனக்கு பிளட் பிரசர். அதுனால உப்பில்லாத ருசியற்ற உணவு, மிகக் கவனமாக இருக்க வேண்டிய சூழ்நிலை. எப்படியோ காலம் போகுது" என்றார். மூன்றாமவர் எனக்கு திடீரென்று வயிற்று வலி வந்து துடித்து விடுவேன் எப்பொழுதும் ஜாக்கிரதையாக உணவு, மருந்து பார்த்து பார்த்து சாப்பிடவேண்டியது இருக்கு வேதனை தான்" என்று சலித்துக் கோண்டார்.

### செய்தித் துளிகள்




2010-11 ஆண்டிற்கான தேசிய நல்லாசிரியர் விருதினை நமது பள்ளியின் தலைமையாசிரியை திருமதி பொ.திலகவதி அவர்களுக்கு பாரத குடியரசுத் தலைவர் மேதகு பிரதிபா பட்டேல் அவர்கள் வழங்கியபோது எடுத்தபடம்.

நான்காமவன் எனக்கு மூட்டுவலி எவ்வளவோ வைத்தியம் செய்து மருந்துகள் சாப்பிட்டு மாறவே இல்லையப்பா எப்படி வேலை செய்வது? எப்பொழுது மாறுமோ தெரியவில்லை" என வேதனைப்பட்டான்.

அடுத்த ரயில்வே நிலையத்தில் மிகவும் வயதானவர் ஒருவர் வந்து இவர்கள் மத்தியில் அமர்ந்தார். கவலையற்ற முகம். அமைதியாகவும் சுறுசுறுப்புடனும் காணப்பட்டார். அவரிடம் நான்குபேரும் தங்கள் நோயைப் பற்றியும் கவலைப்படுவதையும் எடுத்துக் கூறினர் மேலும் அவரிடம் அவர்கள் "நீங்கள் வயதாகியும் நோயற்றவர் போலவும் மகிழ்ச்சியுடனும் இருக்கிறீர்களே அது எப்படி? என ஆச்சரியத்துடன் கேட்டனர்

உடனே வயதானவர் பதில் அளித்தார் "எனக்கும் சிறு வயதிலிருந்து வியாதிகள் வந்ததுண்டு ஆனால் நான் அதற்குக் கவலைப்படவே இல்லை "எதையும் ரசித்து மகிழ்வேன் முதலில் என் கடமைகளை முடிப்பேன். எல்லோரிடமும் நான் விட்டுக் கோடுத்து, அன்புடன் பேசி பழகுவேன்".

" இன்னொன்று சொல்கிறேன் கிணற்றுத் தண்ணீர் எங்கும் ஓடாது தேங்கி இருக்கும். அது போல நல்ல செய்திகளை மனதுக்குள் வைத்துக் கொள்வேன் கிணற்று நீரைப் போல். மேலும் ஆற்றுத் தண்ணீர் ஓடிக்கொண்டே சென்று மறையும் இதைப் போல தேவையற்ற கவலை, செய்திகள் இவற்றை ஆற்று நீரைப்போல் நினைத்து மறந்து விடுவேன். இவ்வாறு இருப்பதால் கவலைகளை, வியாதி வேதனைகளை மறந்து, நல்லவற்றை என்றும் நினைத்துக் கொண்டிருப்பேன்."

பின் அவரும் சில மாத்திரைகள் எடுத்துவாயில் போட்டுக் கொண்டார். அவரைப் பார்த்து அவர்கள் ஆச்சரியப்பட்டனர். **"கிணற்று நீரைப் போல் இன்பத்தை மட்டும் நினைத்திருக்கவும், ஆற்றுநீரைப் போல் துன்பத்தை மறக்கவும் வேண்டும்"** என்பதையும் அவர்கள் உணர்ந்தனர்.

**SMS Quotes**

இழப்பதற்கு ஒன்றும் இல்லை - ஆனால்
ஜெயிப்பதற்கு இந்த உலகமே இருக்கிறது.
உங்கள் மீது உங்களுக்கு நம்பிக்கை இருந்தால்

**செய்தித் துளிகள்**



2011 ஆம் ஆண்டு காந்திநிகேதன் ஆசிரம கிராம சேவா சங்கத்தின் சார்பாக கெஞ்சம்பட்டி பஞ்சாயத்திற்குட்பட்ட 7 கிராமங்கள் தேர்வு செய்யப்பட்டன. அதன் முதல் நிகழ்வாக கொல்லவீரன்பட்டி கிராம பெரியவர்களிடம் கிராம முன்னேற்றம் குறித்து ஆசிரமத் தலைவர் அவர்கள் ஆலோசித்தபோது எடுத்த படம்.



15.08.2011 சுதந்திரதினத்தன்று காந்தி நிகேதன் ஆசிரமம் மதுரை அப்பலோ மருத்துவ மனையுடன் இணைந்து கொல்லவீரன்பட்டி கிராமத்தில் இலவச மருத்துவ முகாம் தொடக்க விழாவில் பள்ளி தலைமையாசிரியை அறிமுக உரையாற்றியபோது எடுத்த படம்.

## என்றும் சுதந்திரம் எங்கும் சுதந்திரம்

எம்.வினோதினி **XI-B**

1. ஜனவரி- ஆஸ்திரேலியா
2. பிப்ரவரி - இலங்கை
3. மார்ச் - கிரீஸ், இத்தாலி
4. ஏப்ரல் - இஸ்ரேல், ஸ்பெயின், ஜப்பன்
5. மே - போலந்து
6. ஜீன் - தாய்லாந்து
7. ஜீலை - கனடா, பிரன்ஸ், ஆப்கானிஸ்தான்
8. ஆகஸ்ட் -இந்தியா,பாகிஸ்தான், இந்தோனேசியா
9. செப்டம்பர் - மெக்சிகோ
10. அக்டோபர் - சீனா, போர்ச்சுக்கல்
11. நவம்பர் - துருக்கி
12. டிசம்பர் - பின்லாந்து

## சுற்றுச் சூழல் பாதுகாப்பு (நிலம்)

கே.முத்துமாரி, உதவி ஆசிரியை


முன்னுரை:

பரந்த இவ்வுலகில் நிறைந்த வளங்கள் உள்ளன. அவைகளை உயர்த்தி எண்ணுவது நம் மனித இனமே. ஏனென்றால் மனிதன் தான் அதனுடைய பலன்களை அறிந்தவன். மனிதனால் மட்டுமே நிலத்தை மேம்படுத்த முடியும் நிலம், நீர், காற்று, வெப்பம், ஆகாயம் இவைகள் எல்லாம் உயிரினங்களின் அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்கின்றன. எனவே அதை பாதுகாப்பது ஒவ்வொரு மனிதனின் கடமையாகும்.

இக்கால கட்டத்தில் எல்லா செயல்களுக்கும் விளைவுகள் இரண்டு உள்ளது ஒன்று நன்மை மற்றொன்று தீமை. நிலம் மாசுபடக்காரணம் இன்று நாம் அதிக அளவில் பயன்படுத்தும் பிளாஷ்டிக் பொருட்கள்.

பிளாஷ்டிக் பொருட்கள் நன்மை அதிகம் அதே அளவில் தீமைகளும் உண்டு. தீமை செய்யும் பொருட்களை குறைத்து அதனை பயனுள்ளதாகச் செய்ய வேண்டும்.

**செய்தித் துளிகள்**



30.07 2011 ஆசிரம நிறுவனர் அமரர் கோ.வேங்கடாசலபதி அவர்களின் பிறந்தநாள் மற்றும் ஆசிரம ஆண்டு விழாவின் ஒரு பகுதியாக உசிலை கல்வி மாவட்ட அளவிலான பள்ளிகளுக்கிடையே பல்வேறு போட்டிகள் நடத்தப்பட்டன. கட்டுரைப் போட்டியில் மாணவர்கள் ஆர்வமுடன் கட்டுரை எழுதியபோது எடுத்த படம்.



30.07 2011 ஆசிரம நிறுவனர் அமரர் கோ.வேங்கடாசலபதி அவர்களின் பிறந்தநாள் மற்றும் ஆசிரம ஆண்டு விழாவின் ஒரு பகுதியாக உசிலை கல்வி மாவட்ட அளவிலான பள்ளிகளுக்கிடையே விளையாட்டுப் போட்டியில் கையுந்து பந்து போட்டியின் போது எடுத்த படம்.

நிலம் மாசுபடுவது எவ்வாறு?:

- ✗ செயற்கை உரம் இடுதல்.
- ✗ பிளாஷ்டிக் குப்பைகளை அதிகமாக நிலத்தில் கொட்டுதல்
- ✗ மண் அரிப்பு ஏற்படுவதால்.
- ✗ விவசாய நிலங்கள் அழிக்கப்பட்டு அதிகமான வீடுகள் கட்டுதல்.
- ✗ அடிகுழாய் கிணறுகள் தோண்டுதல்.
- ✗ இரசாயன சோப்பு வகைகளைப் பயன்படுத்துதல்
- ✗ பாறைகளை உடைத்து பள்ளங்களை ஏற்படுத்துதல்
- ✗ மலைகளை அழித்து விடுதல்
- ✗ திறந்த வெளியில் பயன்படுத்தும் மனித கழிவுகள்
- ✗ பிளாஷ்டிக் பொருட்கள் மக்காத தன்மையுடையதாக இருப்பதால் நிலத்தின் வளம் கெடுகிறது.
- ✗ பிளாஷ்டிக் பொருள்கள் வலிமையானது மற்றும் லேசானதாக இருப்பதால் அதிகம் பயன்படுத்தப்படுகிறது.

## செய்தித் துளிகள்




எம் பள்ளியை சார்ந்த 11 ஆம் வகுப்பு பயிலும் 6 மாணவர்களுக்கு உதகமண்டலத்தில் புகைப்படம் எடுக்கும் பயிற்சி அளிக்கப்பட்டது. பயிற்சியின் போது மாணவர் ஒருவர் எடுத்த புகைப்படம்

**நிலப் பாதுகாப்பும்? தடுப்பு முறைகளும்:**

- ✔ இயற்கை உரங்களைப் பயன்படுத்த வேண்டும்.
- ✔ அதிகமான கால் நடைகளை வளர்க்க வேண்டும்
- ✔ மரங்களை அதிகமாக வளர்க்க வேண்டும்
- ✔ பாதாள சாக்கடைகளைப் பயன்படுத்த வேண்டும்
- ✔ பாலத்தீன் மற்றும் பிளாஷ்டிக் பொருட்களை பயன்படுத்த அரசுதடை செய்வதோடு? ஒவ்வொரு மனிதனும் மட்காத பொருட்களை கண்ட இடங்களில் போட மாட்டேன் என்று உறுதிமொழி எடுக்க வேண்டும்.
- ✔ துணிப்பைகளைப் பயன்படுத்த வேண்டும்.
- ✔ துணிப்பைகளைப் பயன்படுத்துபவர்களை கேலி செய்யக்கூடாது.
- ✔ நிலத்தைத் தோண்டுவதற்கு கனரக இயந்திரங்களைப் பயன்படுத்தக் கூடாது.
- ✔ நில அதிர்வை ஏற்படுத்தக் கூடிய ஒலிப்பான்களைப் பயன்படுத்தக் கூடாது
- ✔ வெடிமருந்துப் பொருட்களைத் தவிர்க்க வேண்டும்
- ✔ பொது இடங்களை சுத்தமாக வைக்க உதவி செய்யவேண்டும்
- ✔ நார்க் கழவுகளை உரமாக்கும் திட்டத்தை கூறவேண்டும்.
- ✔ வீட்டுத் தோட்டம் அமைத்து நிலம் பாதுகாக்க விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும்
- ✔ உழவுத் தொழிலை வளர்ச்சி யடையச் செய்ய வேண்டும்.
- ✔ மிக உயரமான பல அடுக்கு மாடி கட்டடங்களை கட்டவிடாமல் அரசு தடை உத்தரவு பிறப்பிக்க வேண்டும்.
- ✔ நிலச் சரிவைத் தடுக்க உயரமான மரங்களை வளர்க்க வேண்டும்.
- ✔ மண் அரிப்பைத் தடுக்க, நீர் வளம் பெருக அணைக்கட்டுகள் கட்ட வேண்டும்.

முடிவுரை:

நாம் உயிர் வாழ விவசாயம் தேவை. விளை நிலம் பாதுகாப்பது நமது கடமையாகும். நிலங்கள் வளம் உள்ளதாக இருக்க வேண்டும் நிலத்தை மாசுபடுத்துதல் "தன் கையைத் தானே தீயில் இடுதல்" போன்றதாகும்.

நில வளம் காப்போம்!

நோயின்றி வாழ்வோம்!



## இயற்கை வாழ்வும், இயற்கை மருத்துவமும்

ஒன்றி ஒன்றி நின்று அறிவைப் படிக்க
உறுதி, நுட்பம் சக்தி இவை அதிகமாகும்.
அன்று அன்று அடையும் அனுபவங்கள் எல்லாம்
அறிவினிலே நிலைத்துவிடும். ஆழ்ந்து ஆய்ந்து
நன்று என்று கண்டபடி செயல்கள் கற்றும்
நற்பண்பு புலன்களுக்கு அமைந்து போகும்.
என்றென்றும் கருவிடத்தே அறிவை ஒன்றும்.
இயற்கை முறை சிறப்புடைத்து இதே தவமாம்.
- வேதாத்திரி மகரிஷி

உலகம் தோன்றிய நாள் முதல் வாழ்வும் நடை பெறுகிறது வாழ்வுடனேயே தோன்றியதுதான் இயற்கைவாழ்வும். அது ஒரு வாழ்க்கை முறையேயன்றி வெறும் சிகிச்சை முறையல்ல தக்கசூழல், தக்க உழைப்பு, தக்க உணவு இவையே இயற்கைவாழ்வின் அடிப்படை ஆகும்.

மனிதன் நிலைத்த இன்பத்துடன் வாழப்பிறந்தவன் மனத்தின் மூலம் புலன்களை அடக்கித் தன்னை ஆளத்தெரிய வேண்டும். தன்னை ஆளத் தெரிந்தவனுக்கு இன்பம் தானே வந்தடையும்.
ஒழுங்கு ஊராளும்.

இயற்கை மருத்துவம் என்பது வாழ்க்கையை பற்றிய நம் கருத்தை மாற்றிக் கொள்ளுவது. அதாவது நம் வாழ்க்கையை ஆரோக்கிய விதிகளை அனுசரித்து ஒழுங்கு படுத்திக் கொள்வது என்பது போருள்.

அது மருத்துவமனையிலிருந்து இலவசமாகவோ பணம் கொடுத்தோ மருந்து வாங்கசி சாப்பிடும் காரியமல்ல. மருத்துவமனையில் இலவசமாக சிகிச்சை பெறுகிறவன் தர்மம் வாங்குகிறான். இயற்கை மருத்துவத்தை ஏற்றுக் கொள்கின்றவனோ ஒரு போதும் பிச்சை ஏற்பதில்லை. சுய உதவி சுயமரியாதையை அவன் வளர்த்துக் கொள்கிறான் அவன் தன் உடம்பிலிருந்து நச்சுக்களை வெளியேற்றுவதன் மூலம் தன்னை குணப்படுத்திக் கொள்ள முயல்கிறான்.

எதிர் காலத்தில் நோய்வாய்ப்படாமல் இருக்க எச்சரிக்கையுடன் வாழ்கிறான் என்கிறார் மகாத்மாகாந்தி.

நோய்களில் இருந்து விடுதலைபெறுவதும் உடல் நலம் பேணுதலும் மட்டுமே இயற்கை வாழ்வின் நோக்கங்களல்ல. பின்பற்றலும், உளவியலும், இயற்கை முறையில் விவசாயம் முதலியன செய்தலும் இவ்வறிவியலில் அடங்கும்.

பண்பட்ட உள்ளமுடையோரின் குணநலன்கள் இப்படியாகும்

சகிப்புத் தன்மை -மகுடமாகும்
அஞ்சாமை - இதயமாகும்
சத்தியம் - அஸ்திவாரமாகும்
அன்பு - அரசியாகும்
அமைதி - அரசனாகும்
நேர்மை - குருவாகும்
மலர்ந்த முகம் - நற்சான்றாகும்
எளிமை - அழகாகும்
இனிமை - நறுமணமாகும்
திருப்தி - நல்வடிவமாகும்
அகநோக்கு முகம் - திறவு கோலாகும்
பொறுமை - போட்டியாகும்
தூய்மை - தாயாகும்
மரியாதை - செயல் முறையாகும்
பணிவு - பாதுகாவலராகும்
மன உறுதி - அனைத்தையும் தரும்

## உணவே மருந்து மருந்தே உணவு

பி.கிருஷ்ணவேணி

பட்டதாரி ஆசிரியை

உயிரினம் வாழ ஒளியும், காற்றும், நீரும், மண்ணும் இவைகளின் கூட்டால் உருவாக்கப்படும் உணவும் இன்றியமையாததாகும் எந்த ஒரு விலங்கும், பறவையும் மருந்து மாத்திரை சாப்பிடுவதில்லை அவை ஆரோக்கியமாக நோய் எதுவுமின்றி தமது வாழ்நாள் முடிவதும் இயல்பாக வாழ்கின்றன மனிதன் மட்டும் நோய்களால் பீடிக்கப்பட்டு மரணத்தின் பிடியில் சிக்கி நிம்மதி இல்லாமல் நடைபிணமாக உழலுகின்றனர். இதற்கு தீர்வுதான் என்ன, இயற்கை மருத்துவமே சிறந்த வழி ஏன்? எப்படி? இயற்கை மருத்துவம், உணவே மருந்து? மருந்தே உணவு என்ற அஹிம்சை வழியில் அமைந்தது எல்லோரும் ஏற்று கடைபிடிக்க கூடியது.



பக்க விளைவுகள் இல்லாதது நோய் மீண்டும் வருவதில்லை நமக்கு நாமே மருத்துவராய் இருந்து நம்மையும் நமது சுற்றத்தையும் ஏன் சமூகத்தையும் காத்துக் கொள்ளலாம். ஏன் எனில் தன்னை அறிதலே முழுமுதற் கடமை. தன்னைத்தானே அறிவது ஆன்மீகம், தன்னுடலைத் தான் அறிவு ஆரோக்கியம்.

உடலைப் பேணும் முறை

வைகையில் துயில் எழுதல், காலைக்கடன் முடித்தல், நீராடுதல்

உழைப்பு

பசித்துப் புசித்தல்

உடையில் தூய்மை

வாய்கொப்பளித்தல்

சோம்பலுக்கு இடம் கொடாமல்? சிறு சிறு பணியைத் தானே செய்தல்

உணவில் சீர்திருத்தம்

உடற்பயிற்சி

உறவை மேம்படுத்துதல் - நிமிர்ந்து உக்காருதல்

நேராக நடத்தல் - நல்ல உறக்கம்

மென்று உண்ணுதல் - சுவைத்து அருந்துதல்

அண்டத்தில் உள்ளது எல்லாம் பிண்டத்தில் உண்டு

மெய் - (தோல்) - மண்சிகிச்சை

வாய் -(உமிழ்நீர்) -நீர் சிகிச்சை

கண் - (வெப்பம்) –சூரிய நமஸ்காரம்

மூக்கு- (காற்று) - மூச்சுபயிற்சி

காது -(வெற்றிடம்) -உண்ணா நோன்பு

நாம் இயற்கையை மீறும் போது நோய் ஏற்படுகிறது நாம் இயற்கை மருத்துவம் என்ற சொல்லை கேள்விபடும்போது இதை தோற்றிவித்தவர் யார்? எங்கே? எப்போது? என்ற கேள்வி பிறக்கும் ஆனால் இயற்கை மருத்துவம் என்பது தனிப்பட்ட எவருக்கும் சொந்தமானது அல்ல. இயற்கை நமக்கு கற்பித்து நன்மை வழிநடத்தக் கூடிய முறையாகும் எனவேதான் இயற்கை வாழ்வியல் அல்லது இயற்கை மருத்துவம் என்கிறோம். நமது வாழ்க்கை பாதையை தீமையை விட்டு நன்மையின் பக்கம் திருப்புவதே இயற்கை வாழ்வியல்.



முடிவுரை

இயற்கையோடு இயைந்த வாழ்வால் மனிதஇனம் போரற்ற, குழப்பமற்ற, நோயற்ற, மருந்தற்ற, மருத்துவறற்ற, மருத்துவமனையற்ற, காவல் துறை, சிறையற்ற, நடுவர் நீதிமன்றங்களற்ற, நிலமற்ற, நாடற்ற, உலகமே ஒரு குடும்பமாய் வாழும் உயரிய நிலை எய்தும் என்பர் இயற்கை வாழ்வியல் அறிஞர்கள்.

“இயற்க்கையோடு இயைந்து வாழ்வோம்

இன்பங்கள் கோடி பெறுவோம்”

**If not you! Then who?**

**If not now! Then when?**

## மரமும் மனிதனும்

ஆர்.ராஜா அதியமான்
முதுகலை பட்டதாரி ஆசிரியர்(தாவரவியல்)

- மனிதனே நீ தாயின் கருவரையிலிருந்து இந்த உலகிற்கு வந்தவுடன் ஏங்குவது உயிர்க்காற்றான ஆக்ஸிஜனுக்காகத்தானே!
- ஆக்ஸிஜினை வழங்கி உன்னை உயிர்வாழ வைப்பது மரம் எனும் தாய்தான் என்பதனை உணர்ந்து கொண்டாயா!




- குழந்தைப் பருவத்தில் நீ நிம்மதியாய் தூங்க மரத் தொட்டிலாகவும் அழகுநடைபயில "நடை வண்டியாகவும், ஆசையாய் விளையாட பொம்மையாகவும்" இருந்து உன் ஆசைகளை பெரிதாக நிறைவேற்றுவது மரங்கள்தானே!
- பள்ளிக்குச் சென்று ஆர்வமுடன் பாடம் கற்க தொடங்கியதும் நூலாகி, எழுதும் தாயாகி, உன் அறிவுக் கண் திறக்க உதவுவதும் மரங்களே!
- தரையில் அமர்ந்தால் வலிக்குமென்று ஆசனமாக உருமாறி உன்னை அரவணைத்து தாங்குவதும் மரங்களே!
- பூ, காய், கனி, விதை என அள்ளித்தந்து அடிப்படைத் தேவையான உணவை அன்னமிட்டுப் பசியாற்றுவதும் மரங்களே உணவினையும் தந்து, சமைக்க விறகும் தந்து எரிபொருளாக பயன்படும் மரங்கள் நமக்கு ஓர் முன்னுதாரணம்.
- வசிக்க வீடாகவும் உடுக்க உடையாகவும் நோய்தீர்க்கும் மருந்தாகவும் இருப்பது மரங்களே.!
- என்றோ அழிந்து கரியாகி, பெட்ரோலாகி வாகனங்களை இயக்குவதும் மரங்களே!
- தூசியை வடிகட்டி, இரைச்சலை உறிஞ்சி மழைப்பொழிவை அதிகரித்து, புவி வெப்பமாதலை தணித்து தென்றலாய் நம்மை தழுவுவதும் மரங்களே.!
- புல்லாங்குழலாகவும், வீணையாகவும் இயைந்து, இசைமழையில் நம்மை நனைய வைத்து இன்பம் தருவதும் மரங்கள்தான்.!
- ஆலைகள் மற்றும் வாகன கழிவுகளால் காற்று மாசுபடும் பொழுது கார்பன்டை ஆக்ஸைடினை உறிஞ்சி நம் வாழ்நாள் அதிகரிக்க வகை செய்வதும் மரங்களே.!
- இறுதி நிகழ்ச்சியான மரணத்திலும் சிதையாகி உன்னை மறுசுழற்சிக்கு உட்படுத்துவதும் மரங்களே. !
- பிறப்பிலிருந்து இறப்பு வரை அனைத்துமாகி நிற்கின்ற மரம் என்ற தாயே நீ செய்கின்ற உதவிக்கு என்ன கைம்மாறு செய்வது? மரங்களை வெட்டாமல் வனங்களைப் பாதுகாப்பதும், புதிதாய் அதிகமரங்களை வளர்த்து, உலகை பசுமையாக்கி, வளப்படுத்துவதும்தான் மனிதனின் கடமை.!
- மனிதர்கள் இன்றி மரங்கள் உண்டு- ஆனால் மரங்கள் இன்றி மனிதர்கள் இல்லை!!

நீ என்னை(மரம்) நேசித்தால்
நான் உன்னை (மனிதன்) பாதுகாப்பேன்

## AN ELEPHANTS LOYALTY

P.Thangapandiyammal – VII B

Many years ago Alexander, the king of Macedonia, Invaded India. At one stage, he was opposed by the huge army of king porus was six feet high and rode on the biggest elephant. The elephant bestowed the greatest care on its royal masters. While it was still strong it defended him against his enemy. It repulsed the enemy attacks time after time. Pourus was severely wounded by the arrows. He was about to faint seeing that the royal master might fall off from its back, the elephant lowered itself to the grand, Then it gently extracted the arrows from the body of porus with its trunk. It was loyal to its last breath. Its valour and faithfulness deserve to be written in letters of gold.



### செய்தித் துளிகள்



2011 அக்டோபர் மாதம் பௌர்ணமி தினத்தன்று காந்திநிகேதன் ஆசிரம கிராம சேவா சங்கத்தின் சார்பாக கொல்லவீரன்பட்டி கிராமத்தில் விளக்கு பூஜை நடத்தப்பட்டபோது எடுத்த படம்.

## எட்டயபுரத்தில்....

மா.நாகசாமி
தமிழாசிரியா

ஆங்கில மகாகவி ஷேக்ஸ்பியர் பிறந்த 'ஸ்டா போர்டு ஆள் ஆவன்' என்னும் கிராமத்தில் அந்தக் கவியின் ஞாபகார்த்தமாக ஒரு நாடக அரங்கம் அமைந்துள்ளது.

ஆண்டுதோறும் ஷேக்ஸ்பியர் தினத்தில் பல்லாயிரக்கணக்கான ஆங்கில மக்கள் அந்தநாட்டின் பல பாகங்களிலிருந்தும் திரண்டு வந்து அங்கே திருவிழா நடத்துகிறார்கள். நிசப்தமாய் அமைதி குடிகொண்டு விளங்கும் அந்தப் பிரதேசம் அப்போது மக்கள் கூட்டம் நிறைந்து ஒரே கோலாகலமாயிருக்கும் புள்ளினங்களின் இனிய கானம் கேட்டுக்கொண்டிருந்த இடத்தில் காது செவிடுபடும்படியான வாத்திய முழக்கங்கள் கேட்கும்.

அரங்க மேடையில் ஷேக்ஸ்பியர் நாடகங்களை நடிப்பார்கள். பிரசங்க மேடைகளில் அவரது நாடகங்களைப் பற்றிப் பேசுவார்கள். இந்த மாதிரியெல்லாம் ஆங்கில மக்கள் தங்களது கவியைப் போற்றுகின்ற படியினால்தான் சமீபத்தில் அவர்களுக்கு நேர்ந்த பெரும் விபத்தைக் கடந்து முடிவில் ஜய பேரிகை முழக்குதல் சாத்தியமாயிற்று.

பழம்பெரும் மக்களான தமிழர்கள் வருங்காலத்தில் உன்னதநிலையை அடையப் போகிறார்கள். என்பதற்குப் பல அறிகுறிகள் காணப்படுகின்றன. அவற்றில் ஒன்று நமது நாட்டுக் கவிஞர்களை நாம் போற்ற ஆரம்பித்து இருப்பதுதான் சென்ற 1944- ஆம் ஆண்டு இதே செப்டம்பர் மாதம் முதல் வாரத்தில் எட்டயபுரத்தில் பாரதி இலக்கிய மன்றத்து நண்பர்கள் ஒரு மகாநாடு கூட்டினார்கள். பாரதி பிறந்த ஊரில் அந்த மகாகவிக்கு ஒரு ஞாபகச்சின்னம் எழுப்ப வேண்டுமென்று மகா நாட்டில் வேண்டுகோள் விடுத்தார்கள்.

அந்த வேண்டுகோளை பத்திரிக்கையின் மூலம் வெளியிட்டபோது இலங்கை முதல் லாகூர் வரையில் உள்ள தமிழர்கள் மேற்படி யோசனையை உற்சாகமாக

ஆதரித்துப் பொருள் உதவி புரிந்தார்கள்.

ஞாபகச் சின்னக் கட்டடத்துக்கு ஸ்ரீசித்தலே என்பவர் கட்டடச் சித்திரம் வரைந்து கொடுத்தார். அஸ்திவார விழாவுக்கு அவர் வந்திருந்து கட்டடம் கட்டப்போகும் இடம் சுற்றுப்புறம் முதலியவற்றைப் பார்த்துவிட்டு அளவுகள் போன்ற விபரங்களைக் கொடுத்திருந்தார். ஸ்ரீசித்தலே என்பவர் இந்திய தேசத்திலேயே கட்டடச்சிற்ப வேலையில் பிரசித்தி பெற்ற நிபுணர் பல பல்கலைக்கழகங்களில் பட்டங்கள் பெற்றவர். கீழ்நாட்டுச் சிற்பக் கலையின் தத்துவங்களையும் நண்கு உணர்ந்தவர்.



இவ்வளவு பிரசித்தி பெற்ற ஸ்ரீசித்தலே தமிழ்நாட்டு மகாகவியின் ஞாபகார்த்த கட்டடத்துக்கு எந்த விதமான பிரதிபலனையும் எதிர்பாராது பல நாட்கள் சிரமம் எடுத்துக்கொண்டு வேலைகள் செய்தார். தமிழ்மக்களின் சார்பாக ஸ்ரீசித்தலே அவர்களுக்கு மனமார்ந்த நன்றி தெரிவித்துக்கொள்ளப்படுகிறது. அவர் வரைந்த ஞாபகார்த்த கட்டடச் சித்திரத்தைப் போலவே அழகாகவும் கம்பீரமாகவும் கட்டடம் அமையவேண்டும் அதே நேரத்தில் அடுத்த பாரதிதினக் கொண்டாட்டம் வருவதற்குள் கட்டடத் திறப்பு விழாவும் நடந்துவிட வேண்டும் என்பது நமது ஆசை.

அத்துடன் எட்டயபுரம் ராஜா அவர்கள் தமது சொந்த மேற்பார்வையில் கட்டிடத்தைத் துரிதமாகவும் நல்லமுறையிலும் கட்டிக்கொடுக்க ஒப்புக்கொண்டு இருந்தார். அதோடு பாரதி ஞாபகார்த்தக் கட்டிட நிதி வசூலாகிக் கொண்டு வந்த போது எட்டயபுரத்திலிருந்து சில கடிதங்கள் வந்து கொண்டிருந்தன. நடுவிற்பட்டி பாரதி வாசகசாலை என்ற பெயருள்ள ஒரு ஸ்தாபனம் அங்கு இருப்பதாகவும் இவர்கள் பாரதி ஞாபகாத்தமாக கே.பி.சுந்தராம்பாள் அவர்களின் சங்கீதக் கச்சேரி வைத்து மகாராஜா அவர்களின் ஆதரவுடன் பணம் வசூலித்ததாகவும் அந்தப் பணம் டாக்டர் சீனிவாசன் என்பவரிடம் இருப்பதாகவும் தெரியவந்தது. வசூலான பணம் முழுவதையும் அவர் பெருந்தன்மையுடன் கொடுத்தமைக்கும் நடுவிற்பட்டி பாரதி வாசகசாலையைச் சேர்ந்த அன்பர்களுக்கும் கட்டடம் உருவாகக் காரணமாக இருந்த தமிழ் அன்பர்களுக்கும் ஆசிரியர் தமது சார்பாக நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறார்.

## கடிகாரத்தின் பெண்டுலம் சீராக ஆடுவது எப்படி


எஸ்.புஷ்பம், உதவி ஆசிரியை

கலிலியோ பைசா நகரின் தேவாலயத்துக்கு ஒவ்வொரு ஞாயிறன்றும் மத போதனைகள் கேட்கச் செல்வது வழக்கம். ஒரு முறை அப்படிப் போகும் போது தேவாலயத்தின் மேற்கூரையைக் கொஞ்ச நேரம் கவனித்தார். தேவாலயத்தின் கூரையில் ஆடிக் கொண்டே தொங்கும் விளக்கு கலிலியோவின் பார்வையில் பட்டது. அவர் மூளைக்குள் பளிச்சென்று மின்னலாய் ஒரு செய்தி எட்டியது விளக்கின் அசைவையே உற்று நொக்கிக் கொண்டிருந்தார். இது எப்படி ஒரே சீராகக் காற்றில் அசைகிறது? இதன் காரணம்? விளக்கு எவ்வளவு தூரம் ஆடினாலும் ஓர் அலைவை ஆடி முடிக்கும் நேரம் சமமாகவோ ஒன்றாகவோ இருந்தது.

மத போதனை முடியும் முன்பே உண்மையின் தேடலில் ஓர் அறிவியல் கருத்தைக் கண்டுபிடித்துவிட்டார். விளக்கின் தண்டு தன் அலைவுப் பாதையில் ஒரு முனையிலிருந்து மறுமுனை செல்ல காற்றோட்டம் வேகமான போதும், குறைந்த போதும் ஒரு சீரான நேரமே ஆனது.

கலிலியோ தன் இருப்பிடம் சென்று பல

வகையான நீளம், மாறுபட்ட எடைகள் பலவகை பொருள்களால் தண்டுகள் உள்ள மாதிரிகளை உருவாக்கி அலைவினைப் பார்த்தார். அவர் மனதில் வியப்பின் எல்லை விரிந்தது. கவனத்துடன் இச் சோதனைகளைப் பல்வேறு இடங்களில் செய்து பார்த்தார், இதுதான் தனிஊசல் பிறந்த மகத்துவமான கதை இததான் பெண்டுலமும் கூட.




பெண்டுலத்தைக் கண்டுபிடித்த கலிலியோ அதற்கான விதிமுறைகளையும் வகுத்தார். ஓர் ஊசல் அலைவின் நீளம் எவ்வளவாக இருந்தாலும் அது அலைவை முடிக்க எடுத்துக் கொள்ளும் நேரம் ஒன்றாகவே இருக்கும் எடையைக் கட்டும் கயிற்றின் கம்பியின் நீளமே அலைவு நேரம் மாறுபடக் காரணமாகிறது. என்பது கலிலியோவின் முக்கியக் கண்டுபிடிப்பாகும். இவரின் கோட்பாட்டை அடிப்படையாகக் கொண்டே டச்சு விஞ்ஞானியான கிறிஸ்டியன் ஹெஹென்ஸ் முதல் பெண்டுலம் கடிகாரத்தை வடிவமைத்தார். இவ்வாறு தான் கலிலியோ தன் அலைவு நேரக் கோட்பாட்டு தத்துவத்தை நமக்கு அளித்துள்ளார்.

## எழுச்சி மிக்க பாரதம்

என்.பாக்கியலட்சுமி
உதவி ஆசிரியை

பாருக்குள்ளே சிறந்த நம் பாரதநாட்டின் பெருமை அனைத்தும் அதன் ஆன்மீக வாழ்வில் பொதிந்து கிடக்கிறது. ஓ பாரத நாடே! உன்னுடைய ஆன்மீக எழுச்சியால் உலகத்தை வெற்றி கொள் என்று முழக்கமிடுகிறார் சுவாமி விவேகானந்தர். இந்த நாட்டின் ஜீவ நாடி ஆன்மீகமாக இருக்கிறது என்று தெளிவுறுத்துகிறார் சுவாமிஜி.

இந்தியா உலகுக்கு அளிக்கும் கொடை ஆன்மீகம். மெஞ்ஞானத்தை மேலை நாட்டிற்கு அளித்து நம் விஞ்ஞானத்தை வாங்கிக் கொள்ள வேண்டும் என்கிறார் சுவாமிஜி.

இந்த நாட்டில் நீங்கள் எந்த சீர்திருத்தத்தை கொண்டு வந்தாலும் அதனை ஆன்மீகத்தின் அடிப்படையில் கொண்டு வரவேண்டும் இல்லையெனில் அது எடுபடாது என்பதை வரலாறு நமக்கு உணர்த்துகிறது என்கிறார் சுவாமிஜி.




மேல்நிலைப் பள்ளியில் புதிதாக கட்டப்படும் கூடுதல் வகுப்பறை கட்டடத்திற்கு தே.கல்லுப்பட்டி இந்தியன் ஓவர்சீஸ் வங்கியின் சார்பாக ரூபாய் 2.5 லட்சத்திற்கான காசோலையினை வங்கியின் கோட்ட மேலாளர் அவர்கள் ஆசிரம செயலர் அவர்களிடம் நன்கொடையாக வழங்கியபோது எடுத்த படம்.

ஒவ்வோர் ஆன்மாவும் தெய்வீக ஆற்றல் பொருந்தியது. மனிதனுள் பொதிந்து கிடக்கும் இந்த ஆன்மீக ஆற்றலை அவன் வெளிப்படுத்தியாக வேண்டும் இப்படி வெளிப்படுத்துவதற்குத்தான் சமயங்கள் பயன்படுகின்றன. ஆன்ம பலமே உண்மையான பலம். உடல் பலத்தை அது வென்று விடுகிறது. ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக ஏற்பட்ட படையெடுப்பு, ஆக்கிரமிப்பு வெளிநாட்டுக் கலாச்சாரத் தாக்கம்



ஆகியவைகளைத் தாக்குப்பிடித்துக் கொண்டு இந்திய நாடு தன்னடைய யதார்த்தமான கலாச்சாரத்திலிருந்து மாறபடாதிருப்பது உலக அறிஞர்களை வியப்பில் ஆழ்த்துகிறது. கத்தியின்றி ரத்தமின்றி தன் கலாச்சாரத்தைப் பண்டொரு காலத்தில் அயல் நாடுகளில் பரப்பிய பெருமை நம் நாட்டிற்கு உண்டு. அன்புதான் வாழ்க்கை நெறி என்பதை இந்து சமயம் உலகிற்கு நன்கு தெளிவுறுத்தியுள்ளது.

கடவுளை மண்ணிலும் மரத்திலும் காண்கின்ற நாம் மனிதனில் காணத் தவறவிடுகிறோம். கடவுளுடைய சன்னியத்தியம் மனிதனிடத்தில் நன்கு பொலிந்துள்ளது. எனவேமனிதனைக் கடவுளாக வழிபடுவதே என்னுடைய சமயம் என்கிறார் விவேகானந்தர்.

## யார் இளைஞன்

பி.கனகலட்சுமி, உதவி ஆசிரியை

இளமைப் பருவம் என்பது வாழ்வின் ஒரு நிலை, மனதின் ஒரு நிலை. கொழு கொழு கன்னம், சிவந்த உதடுகள், நெகிழும் கை, கால்கள் ஆகியவை மட்டுமே இளமையல்ல. இளமை என்பது துணிச்சலின் ஓர் உருவம். குற்பனைத் திறனில் ஓர் நயம். உணர்ச்சிகளில் ஓர் வேகம், விறுவிறுப்பு. வாழ்வின் ஆர் ஊற்றுக்களிலிருந்து பொங்கிப் பாயும் புது வெள்ளம்.இளமை என்பது அச்சம் இல்லாமை. வீரத்தோடு செயலாற்றும் ஒரு மனப்பாங்கு. எளிய,அமைதியான வாழ்வைவிட அபாயகரமான பணிகளில் இறங்கத் துடிக்கும் பேரார்வம்.

இவை எல்லாம் 20 வயது இளைஞனிடம் இருக்கலாம். ஆனால் அவை அதைவிட அதிக அளவு 60வயது மனிதனிடம் அமைவதைக் காண்கிறோம். வருடங்கள் கூடுவதாலேயே நாம் இளமையை இழந்து விடுவதில்லை, வயோதிகத்தை அடைவதில்லை. நம் நல்ல குறிக்கோள்களை, இனிய இலக்குகளைத் துறந்து விடுவதாலேயே நாம் முதுமையை அடைகிறோம்.

வயது ஏறுவதால் உடலில் தோல் சுருங்கலாம். ஆனால் ஆர்வத்தைக் கைவிடுவதால், உயிர்(ஆன்மா) சுருங்குகிறது.

கவலை, பயம், அவநம்பிக்கை ஆகியவை மனதில் சோர்வைச் சேர்க்கின்றன. ஊக்கத்தையும், உயிரையும் உறிஞ்சி விடுகின்றன.

அறுபதோ அல்லது இருபதோ- எந்த நிலையானாலும் ஒவ்வொரு மனிதனின் மனதிலும் அதிசயத்தைக் காணும் ஆர்வம், அடுத்து என்ன? என்ற குழந்தைத் தனமான தனியாத ஆவல் மற்றும் வாழ்க்கை என்னும் விளையாட்டில் வரும் சந்தோசங்கள் ஆகியவை மலர்கின்றன.

உங்களது மனதின் மையத்திம் ஒரு வயர்லெஸ் ஸ்டேசன் இருக்கிறது. அழகு, நம்பிக்கை, மகிழ்ச்சி, துணிச்சல், வீரம் ஆகியவற்றை எவ்வளவு காலம் வரை அந்த நிலையம் வரவேற்று ஏற்றுக் கொள்கிறதோ அவ்வளவு காலம் வரை நீங்கள் இளைஞராக இருப்பீர்கள். ஆந்த ஏரியல்கள் பழுதடைந்தாலோ அல்லது உங்கள் ஆர்வத்தை வெறுப்பும் தோல்வி மனப்பான்மையும் சூழ்ந்து விட்டாலோ, உங்களுக்கு வயதாகி விட்டது என்று அர்த்தம். உங்களது உண்மையான வயது 20 என்றாலும் நீங்கள் வயதானவர்கள்தான்.

ஆனால் உங்கள் ஏரியல்கள் உயர்ந்து நின்று

இனிய நம்பிக்கை அலைகயை ஏற்றுக்கொண்டால் உங்கள் வயது 80 ஆனாலும் பரவாயில்லை. நீங்கள் என்றுமே இளைஞர்கள்தான்.

## அன்றாட வாழ்வில் அறிவியல்

*ஆர்.சீதாலட்சுமி, உதவி ஆசிரியை*

மின் கம்பியில் அமரும் பறவைகளுக்கு ஏன் ஷாக் அடிப்பதில்லை? நாம் மின் கம்பியைத் தொட்டால் ஷாக் அடிக்கிறது. ஆனால் நிறையப் பறவைகள் அந்தக் கம்பியின் மீதே அமர்கின்றனவே அப்போது அவற்றிற்கு ஷாக் அடிப்பதில்லையே இது ஏன்? ஷாக் என்றால் எல்லோருக்கும் ஒரே மாதிரியாகத்தானே இருக்க வேண்டும்?

மின்னேற்றம் பெற்ற எலக்ட்ரான்கள் என்னும் கண்ணுக்குத் தெரியாத நுண் துகள்கள் மின் கம்பியில் நகர்ந்து கொண்டிருப்பதே மின்சாரம் எனப்படுகிறது. மின்சாரம் ஒரு இடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கு கடத்தப்படுவதற்கு ஒரளவு ஆற்றல் தேவை. மின்சாரம் எப்போதும் தங்கு தடைகளற்று எளிமையாக செல்லும் தன்மையுடையது. அதன் வழியில் தடை ஏற்படும்போது அதன் சீரான போக்கு குலைகிறது.



பறவைகள் அனைத்துமே மின் அதிர்ச்சியை ஒரளவு தாங்கும் வகையில் உடலமைப்பு அமைந்துள்ளது. ஒரளவு எதிர்ப்புத்திறனைப் பெற்றிருக்கின்றன(அல்லது தடுப்புத் திறனை). இந்த திறன் ஒன்றுக்கொன்று வேறுபடும்.

பறவைகளின் உடலுக்குள் மின்சாரம் பாயமால் இருப்பதற்கு இரண்டு காரணங்கள் இருக்கின்றன. முதலில் பறவைகள் மின் கம்பியுடன் ஒரு சர்க்யூட்டை உருவாக்குவது இல்லை இரண்டாவதாக மின்சாரம் தங்கள் உடலுக்குள் பாயாமல் இருக்க பறவைகள் அதிக தடுப்புத் திறனைப் பெற்றுள்ளன.

முக்கியமான காரணம் என்னவென்றால், பறவையின் உடலுக்குள் பாயும் மின்சாரத்தின் அளவில் மிகப் பெரிதாக மாற்றம் ஏற்படுவதில்லை என்பதுதான்.

மின் கம்பியில் அமர்ந்திருக்கும் ஒரு பறவையின் இரண்டு கால்களுக்கு இடையிலான இடைவெளி மிகவும் குறுகியது. இதனால் அதன் கால்களுக்கு இடையில் மிகக் குறைந்த அளவு மின்சாரமே பாய்ந்து செல்கிறது. அது பறவையின் உடலில் பெரிய மாற்றத்தை ஏற்படுத்துவது இல்லை, எடுத்துக்காட்டாக ஹைவோல்ட்டேஜ் மின்கம்பி ஒன்றின் மீது அமரும் பறவை, தனது இரண்டு கால்களையும் மின் கம்பியின் மீத அடுத்தடுத்து வைக்கிறது இதன் காரணமாக அதன் ஒரு காலிலிருந்து மற்றொரு காலுக்கு இடையே பாயும் மின்சாரம் என்பது ஒரு புள்ளியிலிருந்து மற்றொரு புள்ளிக்கு செல்வதாக வைத்துக் கொண்டால் அந்த நிலையில் அது பூஜ்ஜியம். அதாவது பறவையின் இரண்டு கால்களுக்கு இடையில் பாயும் மின்சாரத்தின் அளவு பூஜ்ஜியமாக இருக்கிறது. மின்சாரம் தாக்கிப் பறவைக்கு அதிர்ச்சி ஏற்பட, அதன் உடலுக்குள் பாயும் மின்சார வோல்டேஜ் விகிதம் குறிப்பிடத்தக்க அளவு மாறுபட வேண்டும்.

மின்கம்பிக்கும், எர்த் எனப்படும் பூமிக்கும் இடையிலான மின்சார வோல்டேஜ் விகிதம் ஆயிரக்கணக்கான வோல்ட் அளவில் மாறுபடும். இதனால்தான் தரையில் உடலின் பாகங்கள் பட்டவாறு மின் கம்பிளை நாம் தொட்டால் துக்கி அடிக்கிறது.

அதே நேரம் ஒரு பறவை ஒரு மின் கம்பியைத் தொட்டுக் கொண்டே மற்றொரு கம்பியையும் தொடுகிறது என்றால் அது மிதமான அதிர்ச்சியை அனுபவிக்கும். ஆனால் அந்தப் பறவை மின் கம்பியைத் தொட்டுக் கொண்டே, நிலத்துடன் தொடர்புடைய ஏதாவது ஒரு மின் கடத்தும் பொருளைத் தொட்டால் மிகக் கடுமையான மின்

அதிர்ச்சிக்கு ஆட்படும், இதனால் பறவை இறந்து போகும். அதாவது ஒரு பொருளுக்கும் மற்றொரு பொருளுக்கும் இடையிலான மின்சார ஆற்றல் எவ்வளவு அதிகமாக வேறுபடுகிறதோ, அவ்வளவு அதிக அளவில் தொடர்புடைய பொருளை மின்சாரம் தாக்கும்.

நிலத்துடன் தொடர்புடைய மின் கடத்தும் பொருள்களைத் தொடாமல் மின் கம்பியை மட்டும் தொட்டால் ஷாக் அடிக்காது. அதனால்தான் மின்சாரக் கருவிகளைக் கையாளும் போது மின் அதிர்ச்சி ஏற்பட்டு விடாமல் இருக்க ரப்பர் கையுறைகளையும் ரப்பர் செருப்புகளையும் அணிந்து கொள்கிறோம். கெட்டியான ரப்பர் மின்சாரத்தை கடத்துவதில்லை.

## தமிழர்களின் வாழ்வியலில் நீர்ப்பயன்பாடு

இரா.ஜெனகராஜன், முதுகலை தமிழாசிரியர்

உலகில் தோன்றிய உயிரினங்களுக்கு இன்றியமையாதது தண்ணீர். 'நிரின்றி அமையாது உலகு' என்பது வள்ளுவரின் வாக்கு. தமிழ் மக்களிடையே நீர் பற்றிய மதிப்பீடுகள் பல திறந்தவையாகக் காணப்படுகின்றன. தமிழ் மண்ணில் நம்பிக்கை சார்ந்த பழக்க வழக்கங்கள், வழிபாடுகள், கலைகள், சடங்குகள் போன்றவை மலிந்துள்ளன. அவற்றில் நீர்ப் பயன்பாடு அதிகமாக இருப்பதைக் காணலாம்.

**நம்பிக்கை சார்ந்த பழக்க வழக்கங்கள்:**

மனமகிழ்ச்சிக்காக தமிழர்கள் புதுப்புனலாடி நின்றமையை சங்கப் பாடல்கள் சுட்டும் ஆடிப் பெருக்கு அன்று புது மணமக்கள் நதியில் நீராடி வழிபட்டால் நீண்ட வாழ்நாள் கிட்டும் என்பது நம்பிக்கை.



இன்றும் நாம் காவிரிக் கரையோர மக்கள் காவிரி நதியில் நீராடி காவிரி அன்னையை வழிபடுவதைக் காணலாம். ஆலயங்கள் சிலவற்றில் வழங்கப்படும் நீருக்கு(தீர்த்தம்) மருத்துவ ஆற்றல் உண்டென நம்புவது ஒரு புறம். கங்கை நீரை புனிதம் நிறைந்தது பாவம் கழுவுவது எனக் கருதி அதனைப் பயன்படுத்துவது மற்றொரு புறம். தீபாவளிப் பண்டிகை அன்று சில சமுதாய மக்கள் ஒருவரையொருவர் கேட்டுக் கொள்ளும் கேள்வி கங்கா ஸ்நானம் ஆச்சா? புதுமனை புகுவிழாவின் போது இல்லத்துக்குள் கொண்டு செல்லப் பெறும் முக்கிய பொருள்களில் நீர் நிறைந்த குடமும் ஒன்று. இதனால் நிதி வளமும் நீர் வளமும் குடிபுகுவதாக நம்பிக்கை உள்ளது.




02.10.2011 காந்தி ஜெயந்தி விழா அன்று பள்ளி படிப்பு மற்றும் விளையாட்டில் சிறந்த மாணவ, மாணவிகளுக்கு இந்தியன் ஓவர்சீஸ் வங்கி மதுரை மண்டலம் சார்பாக பரிசுகள் வழங்கி பாராட்டப்பட்டது.

கோவில் குடமுழுக்கு விழாக்களில் மக்கள் கோபுரத்தின் உச்சியில் இருந்து தெளிக்கப்படும் கலச நீர் தங்கள் மீது படுவதை புனிதமாகக் கருதுகின்றனர். மேலும் கோவில்களின் கருவறைகளில் கடவுள் சிலைகளைக் கழுவும், அபிஷேகம் செய்யும் நீர் புனிதமானது எனக் கருதி அதனை உள்ளங்கைகளில் பிடித்து குடிப்பதும் தலையில் தெளித்துக் கொள்வதுமான நிகழ்ச்சிகளை எல்லாக் கோவில்களிலும் காண்கிறோம். இசுலாமியர்களின் மந்திரிப்பு மையங்களில் மாந்திரிகம் பெற்ற நீரே பயன்பாட்டாளர்களுக்கு வழங்கப் பெறும். கிறிஸ்துவ ஆலயங்கள் சிலவற்றில் பிரார்த்தனை அரங்கில் நீர் ஊற்றி வைக்கப் பெற்று பக்தர்களின்

பயன்பாட்டிற்கு உரியதாக அமைவதையும் காணமுடிகின்றது.

**வழிபாட்டு நிலையில் நீர்ப்பயன்பாடு**

தமிழர்கள் தம் பொது நம்பிக்கைக்கு அப்பால் நீரை வழிபடு பொருளாக நோக்குவதும் நடைமுறையில் காணப் பெறுகின்றது. நல்ல மணவாளன் அமையப் பெறவேண்டுமென்பதால் தம் பெண்மக்களைத் தைந் நீராடலுக்கு(தற்போது மார்கழி நீராடல்) அணியமாக்கும் அன்னையரைச் சங்க நூல்கள் பேசுகின்றன. சீதப் புனலாடி, சீற்றம் பலம்பாடி நின்ற நங்கையரை பாவைப் பாடல்கள் முன்வைக்கும். தமிழர்கள் தம் வழிபாட்டிற்குரியனவாகக் குறித்துக் காட்டுபவை மூன்று அவை மூர்த்தி, தலம், தீர்த்தம். ஆலயப் பகுதிகளுக்குப் பயணம் மேற்கொள்வோர் அதனைத்திருத்தலப் பயணம் என்று கூறவதைப் போலவே வழிபாட்டிற்குரிய நீர்நிலைகள் அமைந்துள்ள இடங்களுக்குச் செல்லுங்கால் அப்பயணத்தைத் தீர்த்த யாத்திரை என்று குறிக்கின்றனர். அமாவாசை நாளில் கடலாடுதல், முன்னோர்க்குச் சிறப்புச் செய்தல் ஆகியன நீருடன் கூடிய வழிபாட்டினை எடுத்துரைப்பவை.

**சடங்குகள் சுட்டும் நீர்ப்பயன்பாடு**

ஆலயத்திலும் இல்லங்களிலும் மேற்கொள்ளப்பெறும் பற்பல சடங்குகளில் நீர் முதன்மை இடத்தைப் பெறுகின்றது. அம்மன் கோவில் நிகழ்வுகளில் முதல் நிகழ்வாக கலசமெடுத்தல் நிகழும். கோயிலில் இருந்து கொண்டு செல்லப்படும் கலசத்தில் அருகில் உள்ள நீர் நிலைகளில் இருந்து தூய நீர்நிரப்பி எடுத்து வருவர். சிவன் கோவில்களில் நடைபெறும் சங்காபிஷேகம் கவனிக்கத்தக்கது. 108 அல்லது 1008 சங்குகளில் தூய நீர் நிரப்பப் பெற்று முறையான சடங்கு நிலையில் கருவறைத் தெய்வத்திற்கு அபிஷேகம் செய்யும் சடங்கு நிலை கவனிக்கத்தக்குது. பூசையில் படையல் இட்டவற்றைச் சுற்றி வட்டமாக நீர் சொரிந்து இறைக்கு உரிமையாக்குவது மரபு.

சிலப்பதிகாரத்தில் வஞ்சிக் காண்டத்தில் உள்ள நீர்ப்படை காதை இமயத்தில் இருந்து கண்ணகிக்குச் சிலை செய்ய கங்கையில் முழுக்காட்டி தூய்மை செய்ததைக் குறிப்பிடும். வீடு கட்டும்போது நிலைவைத்தல் முக்கியமான நிகழ்ச்சி. அப்போது நிலையை நீரூற்றித் தூய்மை செய்து, மஞ்சள், குங்குமம் சாற்றி, பூஞ்சரஞ்சூட்டி நிறுத்துவர்.

இன்பம், துன்பம் இரண்டும் வரும் பொழுதில் மனித வாழ்வில் சடங்குகள் பல மேற்கொள்ளப் பெறுவது இயல்பானது. வீட்டிலுள்ள சிறுமி பெரியவளானதும் உடனடியாக அத்தை அல்லது அத்தைமார் வரவேண்டும். அவர்கள் தண்ணீர் ஊத்தும்பணிக்குப் பிறகே பிற யாவும் நடைமுறைப்படுத்தப்படும். இந்தச் சடங்கு விழா மஞ்சள் நீராட்டு என்றும் பூப்புனித நீராட்டு விழா என்றும் வழக்காற்றில் கூறப்பெறுகின்றது. இறப்புச் சடங்குகளில் ஒன்றின் பெயர் நீர்மாலை எடுத்தல் இறந்தவரின் மகன் மற்றும் பிறர் குளித்து முடித்து ஈர ஆடையுடன் இல்லத்துக்கு அருகில் உள்ள நீர்நிலை ஒன்றில் இருந்து குடம், செம்பு ஆகியவற்றில் நீர் சுமந்து வரக் காணலாம். பிணத்தைச் சுற்றி வரும்போது சுற்றுபவரின் தோள் மீது சுமக்கப்பெற்ற பானை மூன்று முறை துளையிடப்பட்ட தண்ணீர் வீழ்வது நிகழும். நீரின் மூலமாக இந்தச் சடங்குகள் நடைபெறுவதைக் கவனித்தல் வேண்டும்.

**பிற நிகழ்வுகளில்**

நாட்டுப்புற கரகாட்டத்தில் தொடக்க நாட்களில் நீர் மட்டுமே நிரப்பப்பட்து. சக்திக் கரகம் என்ற பெயர் பெருவழக்காக வழங்கி வருகிறது. நீர் பற்றிய பழமொழிகள் ஏறாளம். 'தாயைப் பழித்தாலும் தண்ணீரைப் பழிக்காதே, மரம் வைத்தவன் தண்ணீர் விடுவான், தவித்தவன் வாய்க்கு தண்ணீர் தரவேண்டும்' போன்ற பழமொழிகள் கவனிக்கத்தக்கன. பழங்கதைகளில் புனல் வாதம் குறிக்கத்தக்கது.

இவ்வாறாக தமிழர் தண்ணீர் பல்நிலைகளில் முக்கியத்துவம் பெற்றுள்ளன. நீரின் சிறப்பையறிந்து வள்ளுவர் வான்சிறப்பை கடவுள் வாழ்த்துக்கு அடுத்து வைத்துள்ளமை எண்ணத்தக்கது. ஏனெனில் 'கொடுப்பதுவும் கெடுப்பதுவும் நீரே'.

## விடுகதை

பி.தங்கப் பாண்டியம்மாள் VII-B

1. தண்ணீரிலே நீந்தி வரும் தரையிலே தாவி வரும் அது என்ன ? தவளை
2. துள்ளித் திரிவான் தண்ணீரில், துடித்துத் துவள்வான் கரையில் அது என்ன ? மீன்
3. அடிமேல் அடிவாங்கி அனைவருக்கும் ஆனந்தம் தருவான் அவன் யார் ? மத்தளம்
4. யானை விரும்பும் சேனை விரும்பும் கடித்தால் இனிக்கும் அவன் யார் ? கரும்பு
5. செம்பு நிறைய ரத்தினம் அது என்ன ? மாதுளைப் பழம்
6. விடிய விடிய பூந்தோட்டம். விடிந்து பார்த்தால் வெறும் தோட்டம் அது என்ன ? வானம்
7. அள்ள முடியும் கிள்ள முடியாது அது என்ன ? தண்ணீர்
8. மாடு கட்டிக் கிடக்கு, கயிறு வீசிக் கிடக்கு அது என்ன ? பூசணிக்காய்
9. போவான் வருவான் தும்பப்பன். ஒரு காலில் நிற்பான் தும்பப்பன். அது என்ன? கதவு
10. குண்டன் குழிக்குள் விழுந்திட்டான் அது என்ன? பணியாரம்
11. பளபளக்கும் படமெடுக்கும் ஆனால் பதுங்கி வாழும் அது என்ன ? பாம்பு
12. கையுள்ள மரம் எது? முருங்கை மரம்
13. வெள்ளைக் காடு கருப்பு விதை அது என்ன? புத்தகம்


## ஹிட்லரை பணிய வைத்ததால் நடந்த சரித்திர விபரீதம்

சீ.கௌசல்யா, உதவி ஆசிரியை

தியாகி செண்பகராமன் பிள்ளை சுதந்திரப் போராட்டத்தில் நேதாஜிக்கே ரோல்மாடலாக இருந்தவர். தனது நெஞ்சுரத்தால் ஜெர்மானிய சர்வாதிகாரி ஹிட்லரை மன்னிப்புக் கேட்க வைத்தார். இந்த மாவீரன் ஒரு தமிழன் என்பது சரித்திர பெருமை.

இவருடைய பெற்றோரான சின்னச்சாமி பிள்ளை- நாகம்மாளுக்கு குமரி மாவட்டம் குளச்சல் பகுதிதான் சொந்த ஊர். சின்னச்சாமி பிள்ளை திருவிதாங்கூர் அரசில் போலீஸ் ஏட்டாக பணிபுரிந்தவர். பணிநிமித்தமாக திருவனந்தபுரத்துக்கு குடிபெயர்ந்தனர்.

செண்பகராமன்பிள்ளை 1891 ஆம் ஆண்டு பிறந்தார். திருவனந்தபுரத்தில் தைக்காடு மாதிரி பள்ளியில் படிக்கும்போதே அவருள் சுதந்திர தாகம் ஏற்பட்டது 'ஸ்ரீபாரதமாதா வாலிபர் சங்கம்' என்ற அமைப்பை தொற்றுவித்து சகமாணவர்களுடன் வந்தே மாதரம் பாடினார். அப்போதுதான் சதந்திரப் போரின் தாரக மந்திரமான 'ஜெய்ஹிந்த்' என்ற கோஷம் அவரிடம் இருந்து பிறந்தது. இதனால் செண்பகராமன் பிள்ளையை அடையாளப்படுத்தும்போது ஜெய்ஹிந்த் செண்பகராமன் என்று குறிப்பிட்டனர். பள்ளிப்படிப்பை முடிக்கும் தருவாயில் உறவினர் ஒருவர் மூலம் சர்.வால்டர் வில்லியம் ஸ்டரிக்லேண்ட் என்பவருடன் நட்பு ஏற்பட்டது. அவருடன் செண்பகராமன் பிள்ளையும் ஐரோப்பா சென்றார். அப்போது அவருக்கு வயது 15 அங்கு ஆஸ்திரியாவில் அவர் உயர்கல்வியை முடித்தார். பின்னர்



டிப்ளமோ பொறியாளர் ஆனார். இதன் பின்னர் இந்திய சர்வதேசக் குழு என்ற ஒரு அமைப்பை ஏற்படுத்தி அதன் மூலம் ஐரோப்பிய நாடுகளில் ஆங்கிலேயருக்கு எதிராக பிரச்சாரம் செய்தார்.

மேலும் பல நாடுகளுக்கு சென்று இந்தியாவின் சுதந்திரம் பற்றி பேசினார். இதற்கு இடையே ஜெர்மன் நாட்டுப் படையில் அவர் சேர்ந்து இங்கிலாந்து நாட்டினருக்கு எதிராய் போராடினார்.

அப்போது 1914 ஆம் ஆண்டு முதல் உலகப்போர் மூண்டது. எம்டன் என்ற நீர்மூழ்கி கப்பலில் செண்பகராமன் பிள்ளை பொறியாளராக இருந்து ஆங்கிலேயருக்குத் தெரியாமல் அவர்கள் ஆதிக்கம் செலுத்திய இந்தியாவுக்கு வந்தார். சென்னையில் ஆங்கிலேயரின் கோட்டையை நோக்கி அந்த நீர்மூழ்கி கப்பலில் இருந்து குண்டுகள் பறந்தன.

இந்த தாக்குதலை ஆங்கிலேயர் சற்றும் எதிர்பார்க்கவில்லை. நிலை குலைந்தனர். இதன் பின்னர் 1919 ஆம் ஆண்டு வியன்னா மாநாடு நடந்தது. இதில் செண்பகராமன் பிள்ளை-நேதாஜி சந்திப்பு ஏற்பட்டது. எம்டன் தாக்குதலுக்குப் பிறகு செண்பகராமன் பிள்ளையை நேதாஜி நன்கு அறிந்து வைத்து இருந்தார் அவரைப் போலவே நேதாஜிக்கும் ஆயுதம் ஏந்தி அன்னியரை சரணடைய வைக்க முடியும் என்ற நம்பிக்கை இருந்தது. அப்போதுதான் நேதாஜியிடம் ஜெய்ஹிந்த் கோஷம் தொற்றிக்கொண்டது.

நேதாஜியுடனான சந்திப்புக்குப் பிறகு செண்பகராமன் பிள்ளைக்கு ஜெர்மானிய சர்வாதிகாரி ஹிட்லருடன் மேலும் நெருக்கம் ஏற்பட்டது. ஒரு முறை இந்தியாவுக்கு சுதந்திரம் கிடைத்தால் நாட்டை ஆட்சி செய்யும் திறமை இந்தியருக்கு இருக்குமா? என்பது சந்தேகமே என்று ஹிட்லர் தனது கருத்தை எடுத்து வைத்தார். இதற்கு செண்பகராமன் பிள்ளை கடும் எதிர்ப்பு தெரிவித்தார். இந்த கூற்றை தெரிவித்ததால் ஹிட்லர் இந்தியர்களை அவமானப்படுத்தி விட்டார் எனவே அவர் மன்னிப்பு கேட்க வேண்டும் என்று உறுதிப்பாட்டில் இருந்தார். வேறு வழியின்றி ஹிட்லரும் எழுத்துப் பூர்வமாய் மன்னிப்பு கேட்டார்.

உலகையே நடுநடுங்க வைத்த ஒரு சர்வாதிகாரி ஒரு இந்தியரிடம் மன்னிப்பு கேட்ட இந்த தகவல் ஹிட்லரின் ஆதரவாளர்களை திகைக்க வைத்தது. அவர்கள் செண்பக ராமனின் உயிரையே பறித்து விட்டனர். 1934 ஆம் ஆண்டு மே மாதம் நடைபெற்ற ஒரு விருந்து நிகழ்ச்சியில் விஷம் வைத்த உணவை தந்து அவரது வாழ்க்கையை முடித்து விட்டனர்.

வீரம் விளைந்த செண்பகராமன் உடலை விஷம் வீழ்த்தி விட்டது. ஆனால் விண்ணை முட்டிய அவரது புகழை காலத்தாலும் அழிக்க முடியாது. ஜெய்ஹிந்த்.

## நுனிவரை சென்றிடு

**இரா.வைகை**

**முதுகலை தமிழாசிரியை**

கனவு, ஆழ்மனத்தின் ஆசைகளின் அழகிய வெளிப்பாடு. இன்று நாம் அனுபவிக்கும் வசதிகள் அனைத்தும் கடந்த காலத்தில் யாரோ சிலர் கண்ட கனவுகள் தான். துவண்டு போனவன் 'தோல்வி' என்கிறான். துணிவு கொண்டவன் 'வெற்றியின் முதல் படி' என்கிறான். தேல்விக்கான காரணங்களைச் சந்தித்து, புதிய திட்டங்களோடும், புத்துணர்ச்சியோடும் மீண்டும் புறப்படுகிறான்.

இப்படி மீண்டும், மீண்டும் புறப்படுவன் வெற்றி பெறாமல் இருப்பதில்லை. வெற்றி பெற்றவர் எவர் வாழ்விலும் நீங்கள் இதைப் பார்க்க முடியும் கவிஞன் ஒருவன் இப்படிக் கூறுகிறான்.

தேம்பிக் கிடப்பவனுக்கு

பூமி முற்றுப்புள்ளி

தேடல் உள்ளவனுக்கோ

நெற்றிப் பொட்டு

தேடலின் புறப்பாடு இது. இதனையே வள்ளுவனும் தனது வாய்மொழியாக

'ஊழையும் உப்பக்கம் காண்பர் உலைவின்றித்

தாழாது ஒற்று பவர்'

என்று கூறி ஊழை அதாவது விதியினை நம்பித் தன்னம்பிக்கை இல்லாத நிலையை அடையக் கூடாது. என்று தெளிந்த சிந்தையர் ஆனார். ஆள்விளையுடைமை, மற்றவரையும் உயர்த்த முடியும் என்பதனை அறிய முடிகிறது எனவே ஆள்விளையுடைமையை நாம் வளர்த்துக் கொள்வது அவசியம்.

இதே வள்ளுவர் கூறிய மற்றொரு கருத்தினையும் நாம் எண்ணிப்பார்ப்பது அவசியம் துன்பத்தை இன்பமாக்க முயற்சி செய். அதற்காக துவண்டு துறவு பூண வேண்டியதில்லை. பொறுத்துக் கொள்ள வேண்டியதில்லை. மேலும் மேலும் முயற்சி செய் என்று அறிவுறுத்தினார். அவரது குறள்.

'தெய்வத்தால் ஆகாது எனினும் முயற்சிதன்

மெய்வருத்தக் கூலி தரும்.'

என அறிவுறுத்துகிறது. ஊழினால் - தெய்வத்தால் ஆக முடியவில்லை என்றாலும் உன்னால் முடியும். சோர்வு கொள்ளாதே. வெற்றி பெறும் வரை முயற்சி செய் என்று ஊக்குவித்தார். இம்முயற்சி தானே மனிதனை மாண்புடையவன் ஆக்குகிறது.

வரலாறு தெரியாத காலத்திலிருந்தே மனிதன் தன் முயற்சியால் முன்னேறி இன்று நாகரிகத்தின் தலைமணியாய் விளங்குகின்றான். பழைய கற்காலம், புதிய கற்காலம், கணிப்பொறி காலம் என்றெல்லாம் பேசப்படுவது மனிதனின் முயற்சியையே எடுத்துக் காட்டுகிறது.

சின்னஞ்சிறிய எறும்புகளின் சுறுசுறுப்பைப் பாருங்கள் மழைக் காலத்தில் முட்டை கொண்டு திட்டை ஏறும் அவற்றின் முயற்சியால் எறும்பினம் அழியாமல் வளர்ந்தோங்கி வருகிறது. பூக்கள் தோறும் அமர்ந்து தேன் எடுத்துத் தன் கூட்டில் சேர்த்து வைக்கும் தேனீக்கள் முயற்சி பாராட்டத் தக்கது அல்லவா? குருவி கூடு கட்டுவதும் அவற்றின் முன்னேற்ற முயற்சிகள் அல்லவா?

எனவே நாமும் வாழ்வின் இறுதி வரை முன்னேற்ற வழி செல்ல எண்ணுதல் சிறப்பென கருததுதல் நலமல்லவா? முயற்சி உடையவனைக் கண்டால் தெய்வமே வேட்டியை மடித்துக் கட்டிக் கொண்டு முன்வந்து அவனுக்கு உதவி செய்யும் என்று கூறும் வள்ளுவர் கருத்துக்கள் சிந்தனைக்கு உரியனவாம் நம்பிக்கையோடு முயன்றால் கருங்கல் பாறையும் நொறுங்கிவிழும் - உன் கைகளில் பூமி சுழன்று வரும்.

## செய்தித் துளிகள்





2011ஆம் ஆண்டு நடைபெற்ற குறு வட்ட, மண்டல, மாவட்ட அளவிலான பல்வேறு விளையாட்டு போட்டிகளில் கலந்து கொண்டு வெற்றி பெற்ற எம் பள்ளி மாணவ, மாணவியார்களுடன் தலைமையாசிரியை, உதவித்தலைமையாசிரியர் மற்றும் உடற்கல்வி ஆசிரியர்கள்.

கட்டை விரலை விடவும் இமயம்

குட்டை என்பதை எடுத்துச் சொல் - உன்

சுட்டு விரலின் நகமாய் வானம்

சுருங்கிய தென்று முழக்கிச் சொல்

என புதுக்கவிஞர் தாரா பாரதி நம்பிக்கை முழக்கமிடுகிறார். நம்பிக்கையினால் முயன்று நுனி தொட்டவர் வரலாறு பலவுண்டு.

சிலந்தியின் முயற்சியைக் கண்டு ஊக்கம் கொண்டு படையெடுத்து வென்றான் இராபர்ட் புரூஸ். கண் தெரியாது இருந்த போதிலும் முதுகில் எழுதச் செய்து படித்துக் கவிஞர் ஆனார். அந்தகக் கவி வீரராகவர். வீடு வீடாகச் சென்று ஏடுகளைத் தேடி புதுப்பித்துப் பதிப்பித்துத் தமிழ் தொண்டாற்றினார் தமிழ்தாத்தா உ.வே.சா. விளக்கடியில் படித்து உயர் நீதிபதியானார் முத்துச்சாமி ஐயர் தீண்டத்தகாதவர் என்ற இழி சொல்லை பொருட்படுத்தாது முயன்று கற்று பாரத சட்டத்தையே எழுதித் தந்தார் அம்பேத்கார். தாமஸ் ஆல்வா எடிசனின் முயற்சியால் உருவான விந்தைகள் எத்தனை! எத்தனை!

செருப்புத் தைத்த ஸ்டாலின் ரஷ்ய அதிபர் ஆனார். ஹிட்லர் தன்னம்பிக்கை முயற்சியால் உலகத்தையே ஆட்டிப் படைத்தான். உருளைக் கிழங்கு உலர்த்திய ராக்பெல்லர் உலகப் பணக்காரர் ஆனார். வெடிமருந்தைக் கண்டு பிடித்த நோபல் தன் பெயரால் ஒரு பெரும் பரிசை நிறுவினார். இன்னும் வாழும் இக்காலத்திலேயே தம் முயற்சியால் வெற்றிக் கனியைச் சுவைத்துக் கொண்டிருக்கும் பலரோடு நாமும் வாழ்ந்து கொண்டு தான் இருக்கிறோம்.

“சோம்பல் மிகக் கெடுதி பாப்பா” என்ற பாரதியின் பொன்மொழி போற்றி இடையறாது உழைத்தால்தான் வாழ்வில் வெற்றிக் கனியைக் கொய்ய முடியும். அவ் வெற்றியாகிய செயற்கருஞ் செயல்களால் புகழ் பெற்று வரலாற்று நாயகனாக விளங்க முடியும். இதனை ஒவ்வொறுவரும் தன் நெஞ்சில் பதிப்பது அவசியம்.

வாழ்வில் வெற்றி நிரந்தரம் இல்லை

தோல்வியும் இறுதியானதல்ல

தேடல்கள் தொடரட்டும்

வாழ்க்கை வரலாறாகும் வரை...

சாதனைகள்

சரித்திரம் படைக்கும் வரை...

என்ற எண்ணமே வெற்றிக்கு முதற்படி

நிறுத்தத்தில் நிற்காத

அரசு பேருந்துப் போன்றதல்லவா

வாழ்க்கை

இதில் பாதை எங்கும்

பச்சை விளக்குகள் எரிவதில்லையே!

நிலவின் எதிர்பதமான

நிலக்கரி நிறமாய் நீயிருந்தாலும்

மனதுக்குள் வைராக்கிய மிருந்தால்

மண்ணுக்குள்ளும் வைரமாகலாம்

செக்கு மாடாய்ச் சுற்றினாலும்

காலம் காட்டுகிறது

கடிகாரம்

கடின உழைப்பினால்


காலமே உனைக் காட்டும்

நாள்வரும்

அன்று

கோள்கள் தோறும் உன்

கொடி பறக்கும்.



R.Raveena, XI-B

## குறுந்தகவல் தொகுப்பு

கு.தங்கமுடி
தமிழாசிரியர்

பிரச்சனைகளிலிருந்து விலகி இருக்கச் சிறந்த வழி – மௌனம்

பல பிரச்சனைகளைத் தவிர்க்க மிகச் சரியான வழி – புன்னகை

வெறுக்க வேண்டியது ஒரு மனிதனின் கெட்ட குணங்களை மட்டும்தான். அந்த மனிதனை அல்ல.

ஒரு தோல்விக்குப் பின் ஆயிரம் காரணங்கள் இருக்கும். ஆனால் ஒரு வெற்றிக்கு முன் ஆயிரம் தேல்விகள் இருக்கும்.

உலகில் கற்றுக் கொள்ள இன்னும் நிறைய இருக்கிறது என்று உன்னை எச்சரித்துக் கொண்டேயிருக்கிறது. உன்னுள் இருக்கும்

தோல்வி என்பது உளி போன்றது வெற்றி என்பது சிற்பம் போன்றது. முதலில் உளியைப் பிடித்துப் பழகு. அப்போது தான் நீ சிற்பத்தை செதுக்க முடியும். சிரிப்பவர்கள் எல்லோரும் கவலையற்றவர்கள் - அல்ல கவலையை மறக்கக் கற்றுக் கொண்டவர்கள்

நல்லவர்கள் கூட சிலநேரம் தோற்றுப் போகலாம் ஆனால் நம்பிக்கை உள்ளவர்கள் ஒரு போதும் தோற்பதில்லை




என்ன செய்யப் போகிறோம் என்று கலங்காதே என்ன செய்யலாம் என்று யோசி

வெற்றி என்றும் உன் காலடியில்

துன்பம் அனுபவித்த காலத்தை மறந்து விடு ஆனால் துன்பம் கற்பித்ததை மறக்காதே

நீங்கள் கவலைப்படும் போது வாழ்க்கை உங்களைப் பார்த்து சிரிக்கிறது, நீங்கள் மகிழ்ச்சியாக இருக்கும் போது வாழ்க்கை உங்களைப் பார்த்து புன்னகைக்கிறது.

பிறக்கும் போது இல்லாத உன்பெயர், நீ இறக்கும் போது உன்னுடன் தான் இருக்கும். அதை சாவுக்குக் கொடுக்காமல் சரித்திரத்திற்குக் கொடு.





06.11.11 முதல் 12.10.11 வரை அருகிலுள்ள பாப்பையாபுரம் கிராமத்தில் நமது பள்ளி சார்பாக நடைபெற்ற நாட்டுநலப் பணித்திட்ட முகாமில் மாணவர்கள் பள்ளிக்கூடம், தண்ணீர் தொட்டி வளாகம் மயான பாதை சுத்தம் செய்தல், பார்த்தீனியம் செடிகள் மற்றும் பிளாஸ்டிக் அழித்தல், மரக்கன்றுகள் நடுதல், மருத்துவ முகாம், கால்நடைகள் பராமரித்தல் போன்ற பல்வேறு செயல்பாடுகளை மேற்கொண்டனர்.